Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. VI. No. 7.—February 1903.

CONTENTS.


| | | PAGE. |
|---|---|---|
| Vernaculars to be retained........ | Editors.......................... | 241 |
| The Frog in the Solid Rock........ | T. T. Kanaka Sundaram Pillay, B.A. | 242 |
| Reply to the Investigator of the Soul. | Sri La Sri Sendhinatha Aiyar... | 245 |
| The Culture of the Intellect....... | S. K. Sundara Charlu....... | 248 |
| Kasi Kandam...................... | Chidambara Mudaliar....... | 251 |
| Vikramorvasiyam.................. | P. M. Srinivasa Chariar... | 256 |
| The Ideal of Universal Religion. | M. Kuppusamy Aiyar... | ...258 |
| CORRESPONDENCE................... | | 268 |
| REVIEWS OF BOOKS................. | | 271 |
| EDITORIAL NOTES.................. | | 277 |


Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

2546


சம்புடம் VI | 1903ஸ்ரீ பிப்ரவரிமீ 20உ | இலக்கம் 7.


விஷயங்கள்.


சுதேச பாஷை யாக்கம்.—பத்திராதிபர் ...241

கல்லினுட்டேரை.—திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ. 242

ஆன்மவிசாரிக்கு உத்தரம்.—ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்கள்..245

உள்ளப்பயிற்சி.—சருக்கை-கி. சுந்தராசார்லு ...248

காசிகண்டம்.—சிதம்பர முதலியாரவர்கள் ...251

விக்கிரமோர்வசீயம்.—பி. எம். ஸ்ரீநிவாசாசாரியர் அவர்கள் ...256

ஸர்வார்ஹமத லக்ஷணபூர்த்தி.—எம். குப்புசாமி ஐயரவர்கள் ...258

கடிதம். ... ... ... ... ...268

புத்தகக் குறிப்புக்கள் ... ... ... ...271

பத்திராதிபர் குறிப்புக்கள் ... ... ... ...277



Dr. U. V. S. IYER LIBRARY * MADRAS-9 *



பத்திராதிபர்.— { எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.



சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது

1903.

வருஷ சந்தா ரூ 2—8—0] [சஞ்சிகை ரூ. 0—4—0

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

| சம்புடம் VI | 1903௵ பிப்ரவரி௴ 20௳ | இலக்கம் 7. |
|---|---|---|

## VERNACULARS TO BE RETAINED.

### சுதேச பாஷை யாக்கம்.

வடமொழியினின்றும் உருவவகையானும் உறுப்புவகையானும் ஒலிவகையானும் இலக்கணவகையானும் நூற்பரப்பு வகையானும் வேறுபட்டு இயங்குகின்ற தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமென்ற தென்னாட்டு மொழிகளை, அறியாமை காரணமாகவும் வடசொற்களுட் சில இப்பாஷைகளுட் பயிலுகின்றமை காரணமாகவும் மருண்ட சிலர் சுதேச பாஷைகளை யொழித்துவிட்டு அவற்றிற்குப் பிரதியாக வடமொழி பயிலுதலே சிறந்ததென்று முழங்கிய முழக்கம் தென்னாடெங்கும் நடுங்கஞர் விளைத்தது. பண்டிதர் பலர் ஏங்குவாராயினர். சாமானிய சனங்கள் எல்லாம் துன்பக்கடலுளாழ்ந்தனர். பலர் ஆங்காங்கு சபைகள் கூட்டிச் சுதேச பாஷைகளைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளினின்றும் நீக்கப்படாது போற்றிக்கொள்ளப்படல் வேண்டுமென்று விண்ணப்பங்கள் இராசாங்கத்தார்க்கு அனுப்பினர்.

இவையனைத்தையும் உய்த்துணர்ந்த இந்திய துரைத்தனத்தார் உடனே காலந் தாழ்த்தலின்றி நமது சென்னைத் துரைத்த

னத்தாரிடத்திற்குத் தந்தி யனுப்பிச் சென்னைச் சர்வகலா சாலை யாரது அபிப்பிராயம் இவ்விஷயத்தின் கண் எவ்வாறுளது என்று விசாரிப்பாராயினர். அவ்வாறே சென்னைச் சர்வகலா சாலையாரும் கூட்டங்கூடி இவ்விஷயத்தைக் குறித்து ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியின் முடிவாகவும் கடவுளின் அருளாகவும் சுதேச பாஷைகளின் அதிர்ஷ்டமாகவும் இவையனைத்தும் சர்வகலாசாலைப் பாடங்களினின்று நீக்கப்படாது போற்றிக்கொள்ளப்படவேவேண்டும் என்று தீர்மானமாயிற்று. இது சென்னைத் துரைத்தனத்தார் மூலமாக இந்திய துரைத்தனத்தார்க்கு அறிவிக்கப் படுவதாயிற்று.

இனி இந்திய துரைத்தனத்தாரவர்கள் உண்மையை உய்த்துணர்ந்து சென்னைச் சர்வகலாசாலையார் விரும்பியவாறே அவர்களது இஷ்டத்தை முடித்தருளுவார் என்று நம்புகின்றோம். அவ்வாறு முடித்தலே ஏற்புடைத்தாம்; அற்றன்றிப் பிறிதுபட நடத்தல் சால்புடைத்தன்று. இதனைப் பேரறிவாளராகிய இந்திய துரைத்தனத்தார் அறியாமற் போகாரென்பது திண்ணம். ஆகவே, சுதேச பாஷை நீக்கம்போய்ச் சுதேசபாஷைகளுக்கு ஆக்கம் பிறந்ததென்றே நம்பித் தமிழ்ப் பெருந் தெய்வத்தை வாழ்த்தி இறைவற்குத் தெள்ளேணங் கொட்டுவேமாக.

பத்திராதிபர்.

---

## THE FROG IN THE SOLID ROCK.
## கல்லினுட்டேரை.

---

கல்லின் நடுவுள் தேரைகள் உள வென்பதும் கற்களைப் பிளந்த போது தேரைகள் அவற்றின் நடுவுள் காணப்பட்டன வென்பதும் பலரால் நம்பப்படுங் கூற்றுக்களாம்.

"கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்" என்றும்,

"கல்லினுட் டேரைக்கு மேயளிப்பானெங்கள்கண்ணுதலே" என்றும் இக்கூற்றுத் தமிழ்நூலகத்தும் காணப்படுகின்றது. இதனை

உண்மையாகக் கருதுபவர் இந்திய தேசவாசிகள் மாத்திரமல்லர்; பொருளியலறிவிற் சிறந்த மேலைத் தேசவாசிகளும் பலருளர். நியாயமுறைப்படி ஆராயுமிடத்து இக்கூற்று மெய்யுரையாகாது பொய்யுரையாகவே காணப்படும். எங்ஙனமெனின், ஒரு கூற்றினை ஆராய்ந்து காட்டுதும். ஒருகல்லின் நடுவுள் தேரை ஒன்று காணப்பட்டது என்று ஒருகூற்று ஒரு பத்திரிகையில் தோன்றுகின்றது. இங்கே குறிக்கப்பட்ட கல் முழுக்கல் என்பதற்கும் அதில் முன்னரே பிளவாவது வெடிப்பாவது இருந்ததில்லை என்பதற்கும் சாட்சி ஒன்றுமில்லை. அந்தக் கல்லினுள் தேரை இருந்தது அதிற் பிளவிருந்ததிலும் இல்லாதிருந்ததிலு மன்றே தொங்கி நிற்கின்றது. அந்தக் கல்லைப் பிளந்தவர்களைக் கேட்டால் அவர்களுள் ஒருவராவது கல்லைப் பிளப்பதற்கு முன் தேரையைக்கண்டவராயிரார்; அல்லாமலும் கல்லினிற் பிளவு இருந்ததோ இல்லையோ என்பதைக் கருத்துடன் நோக்கினவராயுமிரார். நாம் சாதாரணமாய்க் கல்லினுட்டேரை இருந்ததாய்க் கேட்கும் கதைகளில், அங்கே காணப்பட்ட தேரையைப் பிளக்கப்பட்ட கல்லுடன் சேர்ப்பதற்கு ஓரிம்மி அளவு பிரமாணமும் இருப்பதில்லை. அக்கதைகளில் உண்மையாய்க் காணப்படுவது யாதெனிற் கல்லைப்பிளந்ததன்பின் அக்கற்றாளின்கணின்றும் அல்லது அவற்றின் பக்கத்தினின்றும் தேரைபாய்ந்து போயினதென்பதே. இது மெய்யாகவே நிகழ்ந்திருக்கலாம். கற்களின் கீழ், அல்லது அவற்றின் இடையில் அல்லது பக்கங்களில், தேரைகளிருப்பது யாவருமறிந்த தொன்று; அவ்வாறு வாழ்ந்திருந்த தேரைகள் கற்கள் பிளவு பட்டவுடன் அதனால் முட்டுப்பட்டு அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து பாய்ந்து போவதுண்மை. இவ்வாறு பெயர்ந்து போகும் தேரை பிளக்கப்பட்ட கல்லின் நடுவுள் இருந்ததென்பதற்குச் சிறிதும் இடமில்லை.

இனிக் கல்லின் நடுவுள் தேரையிருப்பது உண்மையாகாமைக்கு வேறு காரணங்களும் உள. தேரை அல்லது தவளையின் பிறப்பைப்பற்றிச் சற்று ஆராய்வேம். மனிதனுடைய பிறப்பின் வரலாறு எவ்வளவு அற்புதமோ அவ்வளவு தவளையின் பிறப்பின் வரலாறும் அற்புதமாய் உள்ளது. தவளைக்குஞ்சுகள் முதன் முதல் நீரில் உற்பத்தியாகின்றன. அப்போது அவைகட்கு மீன்களுக்குப்போல நீரில் மூச்சுவிடுவதற்கேதுவான பூ (gills) என்னும் உறுப்பு உளது; கால் முதலிய உறுப்

புக்கள் ஒன்றும் இல்லை; நீரில் இயங்குவதற்கு ஏதுவான மீன் வால் போன்ற ஒரு வால் உளது. நாள் செல்லச் செல்ல அவற்றிற்குத் தரையில் மூச்சுவிடுதற்கேதுவான நுரையீரல் தோன்றுகிறது; நீரில் மூச்சு விடுதற்குதவியாயிருந்த பூ உலர்ந்து பயனற்றதாகி ஈற்றில் விழுந்துவிடுகின்றது; கால் முதலியஉறுப்புக்கள் முளைக்கின்றன; வாலும் சிறிது சிறிதாய்த் தேய்ந்து இருந்த இடமுந் தெரியாமல் மறைந்து போகின்றது. இவ்விதமாக மீன்வடிவமாக இருந்த தவளைக்குஞ்சு தவளை வடிவத்தை அடைகின்றது. உடனே அது நீரினுள் மூச்சுவிடுதற்கேலாது தரையைத் தேடுகின்றது.

இவ்வாறு தவளை நீரைவிட்டு நீங்கித் தரையில் வாழச்செல்லும்போது உருவத்தால் மிகவுஞ்சிறிதாயிருக்கும். அப்போது அது தான் பெரிதாக வளர்ந்தபின் புகுதற்கேலாத சிறிய தொளைகளிலும் பிளவுகளிலும் நுழைதல் கூடும். இவ்விதமான சிறு தவளைக்குஞ்சு ஒன்று ஒருகல்லின் சிறு தொளைக்குள் புகுந்து சற்றுப்பெரிதாய் வளர்ந்துவிட்டபடியால் வெளிவர ஏலாது இருந்ததாக வைத்துக்கொள்வோம். அப்படியாயின் அது அந்தக் கல்லினுள் அடைபட்டு உணவு கிடைக்கும்வரை உயிரோடிருக்கும். அஃது அப்படி உயிரோடிருக்கும் நாளையில் அந்தக் கல்லுப்பிளக்கப்படுமாயின் அதனுள்ளிருந்து வெளிவரும். ஆயின் இது நம்மவர் கருதும் கல்லினுட்டேரையன்று. அதாவது முழுக்கல்லினுளிருக்குந் தேரையுமன்று; கல்லோடுடன் தோன்றிய தேரையுமன்று.

இதுநிற்க, மெய்ம்மெய்யாய்ப் பரீக்ஷிக்குங் காலத்தில் தேரைகளும் தவளைகளும்மற்றைப் பிராணிகளைப்போலவே மூச்சுவிடக் காற்றும் உண்ண உணவு மின்றி நெடுநாளைக்கு உயிரோடிருக்கமாட்டாதவைகளாகக் காணப்படுகின்றன. இவ்வுண்மையை அறிவதற்காக இங்கிலாந்து தேசத்தில் பக்லண்ட் என்னும் (Bukland) துரை மகனொருவர் சில கற்களை எடுத்து, அவைகளில் குழிகள்பண்ணி, அவற்றினுள் சில தவளைகளையும் தேரைகளையும்வைத்து, அவற்றைச் சிலேற்றினாலும் பளிங்கினாலும் செய்த மூடிகளால்மூடி, தம்முடைய தோட்டத்தில் மூன்றடி ஆழத்திற் புதைத்து வைத்தார். ஒரு வருஷம்சென்றபின் அவைகளைக்கிண்டி எடுத்துப் பார்த்தபோது சிறுதவளைகளும் தேரைகளும் சில ஒழிய எல்லாம் இறந்துபோயிருந்தன; உயிருடனி

ருந்தவைகள் உணவின்மையினல் வாடி வதங்கிப் போயிருந்தன. ஒரு தவளைமாத்திரம் முன்னிலும் நிறை கூடியிருந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால், அதை விட்டுவைத்திருந்த குழியின் மூடி உடைந்துபோய், அதற்குள் பூழுக்கள் முதலிய சிறுபிராணிகள் புக, அவற்றை அந்தத் தவளை பிடித்தருந்தி வளர்ச்சியுற்று நிறையாற் கூடிற்று. உயிரோடிருந்த தவளைகளை எல்லாம் அந்தத் துரைமகன் மறுபடியும் நிலத்துள் புதைத்து ஒருவருஷம் சென்றபின் பெயர்த்துப் பார்த்தார். அப்போது ஒரு தவளையாவது உயிரோடிருக்கவில்லை. அவைகளின் உடல்களிருந்த நிலைமையினல், அவைகள் அவ்வாறு பெயர்க்கப்படுதற்கு நெடுநாளைக்கு முன் உயிர் துறந்தனவாய்க் காணப்பட்டன. முழுக்கல்லினுள் மூடுண்டிருத்தல்போலாது, இடமகன்ற குழிகளுள் இவ்வாறு விட்டு வைக்கப்பட்ட தவளைகள் இரண்டு வருஷ காலங்கூட உயிரோடிருக்காமற் போயினமையால், முழுக்கல்லினுள் தவளைகள்காணப்பட்டன என்னுங்கதைகளைக் கேட்டால் அவைகளை மெய்யுரை என்று கொள்வதற்கு முன், அவைகளுண்மைக்குச் சான்றாக என்ன பிரமாணங்கள் உளவென்பதை, நியாயமன்றத்துள் வியவகாரங்களை விசாரணை செய்யுமாறு போல, நன்றாய் ஆராய்ந்து அறியவேண்டு மென்று யாவரும் ஒத்துகொள்ளுவார்களென்பது தேற்றம்.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

## REPLY TO THE INVESTIGATOR OF THE SOUL.

யாழ்ப்பாணத்து ஆரும் இலக்கச் சுதேசநாட்டியப் பத்திரிகையிற் கண்ட

## ஆன்மவிசாரிக்கு உத்தரம்.

---

ஏகான்ம வாதிகளுக்கும் சைவர்களாகிய நமக்கும் அங்கீகரிக்கற் பாலனவாய்க் கிடந்த பொது வலிய பிரமாணங்கள் சுருதி ஸ்மிருதி புராணங்களேயாம்.

இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத் ।
பிபேத்யல்பஶ்ருதாத்வேதோ மாமயம் ப்ரஹரிஷ்யதி ॥

"இதிகாசபுராணங்களைக் கொண்டு வேதங்களைப் பொருள்படுத்துக; (அங்ஙனம் செய்யாத) அற்பகேள்வியையுடையான் தன்னைவேண்டியவாறு பொருள்செய்து கொன்றுவிடுவன் என்று வேதம்பயப்படுகின்றது" என்பது அபியுக்த சூக்தி. வேதங்களிலே பௌதிகயோகம், நிர்க்குணயோகம், அத்தியாசிரம பாசுபதயோகம் என முத்திறயோகம் கூறப்படுகின்றது. நாராயணம், சுபாலமுதலிய நாராயணோபநிடதங்கள் பௌதிகம் எனப்படும் சகுணயோகம் பற்றியவேயாம். சர்வசாரம், நிராலம்பம், தேஜோவிந்துமுதலிய உபநிடதங்கள் நிர்க்குணயோகம் எனப்படும் சாங்கியயோகம் பற்றியவேயாம். ஈண்டுக்கூறிய சாங்கியம் ஈசுரகீதை இரண்டாம் அத்தியாயத்தின் மேற்று. பகவற்கீதையினும் அவ்வுண்மை கடைப்பிடிக்க. ஈச, கேன, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, பிருகதாரண்ய, சாந்தோக்கிய சுவேதாசுவதர, கைவல்லிய, பிருகச்சாபால, கௌஷீதகி, அதர்வசிரசு, அதாவசிகை முதலிய உபநிடதங்கள் அத்தியாசிரம பாசுபதயோகத்தின் பாலனவாம். வேதாந்தசூத்திரம் இவ்வீசகேனுதி உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டு கிளர்ந்தமையால் இவ்வுபநிடதங்களே முக்கியோபநிடதங்களாகக் கொள்ளப்படும். சீவேசுவர ஜகத்துக்களை மித்தை என்றும் ஆன்மா ஒன்றே மெய் என்றும், அதனையே சச்சிதானந்தம் என்றும், அதனையே பரப்பிரமம் என்றும் கூறும் சர்வசாரமுதலிய உபநிடதங்களை ஆதாரமாகக்கொண்டு வேதாந்தசூத்திரம் பிறவாமையானும், அவ்வுபநிடதப்பொருள்களை ஆதாரமாகக்கொண்டு பேசுவன கைவல்லியநவநீதம், பஞ்சதசப்பிரகரணம், வாசுதேவமனனம், சசிவர்ணபோதம், ரிபுகீதை, பிரமகீதை, ஞானவாசிட்ட முதலியவாதலினும் அவ்வுபநிடதங்களும் அப்பிரகரணங்களும் கவுணப்பாற்பட்டனவேயாம். சுபாலம், நாராயணமுதலிய உபநிடதங்களை ஆதாரமாகக்கொண்டு வேதாந்தசூத்திரம் பிறவாமையானும், அவற்றை ஆதாரமாகக்கொண்டே நாலாயிரப் பிரபந்த முதித்தமையானும் இவ்வுபநிடதங்களும் பிறவும் அம்மாயாவாத உபநிடதங்களும் பிரகரணங்களும்போல கவுணப்பாற் பட்டனவேயாம். எனவே, பௌதிகயோகத்தின் பொருட்டு இராமாநுஜபாஷியமும், நிர்க்குணயோகத்தின்பொருட்டுச் சங்கரபாஷ்யமும், சிரௌத பாசுபதயோகத்தின்பொருட்டு நீலகண்டபாஷ்யமும், அமைந்து ஒன்றுக்கொன்று உயர்ச்சியடைந்து நின்றவாறு தெளியப்படும். இவ்வுண்மை,

[illegible]

என்னும் சுலோகத்தினல் அறியப்படும். இச்சுலோகத்தினல் பௌதிகயோகமாகிய சகுணத்தினும் உயர்ந்தது நிர்க்குணயோகம் எனவும், இதினும் உயர்ந்தது அத்தியாசிரமயோகம் எனவும் அறியப்படும். யாழ்ப்பாணத்துக் கந்தகராடையி லுள்ளவர்கள் கைவல்லியம் ஞானவாசிட்ட முதலியவைகளையும், சென்னை ஆரியனராகிய இரத்தினச்செட்டியாரும், சிதம்பரம் பிரமவித்தியாப் பத்திராதிபராகிய ஸ்ரீநிவாசசாத்தியாரும் எழுதிய புஸ்தகங்களையும் பத்திரிகைகளையுமே பரமபுருஷார்த்தமாகப் படித்துவருதலானும், அவர்கள் தங்கள் கொள்கையின்படி ஆன்மா ஒன்றே என்றுதான் கூறுவர் ஒரே சரீரத்தில் ஒரே ஆன்மாவிருத்தலால் அவர்கள் ஆன்மா ஒன்றெனல் ஒக்கும். அவ்வாறு ஆன்மாசரீரங்கடோறுமிருத்தலால் ஆன்மாக்கள் பல என்று ம-ா-ா-ஸ்ரீ மழவராயப்பிள்ளை யவர்கள் சொல்வதும் ஒக்கும். தாழ்ந்தமாயாவாதோபநிடதங்களிலே சீவேசுரர் மித்தை என்று சொல்லப்படுதலானும், மாயாவாதோப நிடதங்களினும் உயர்ந்த பிரபல சைவசுருதிகளில் அவ்வாறு சொல்லப்படாமையானும் உயர்ந்த உபநிடதங்களை நோக்க மாயாவாதோப நிடதங்கள் கீழே கழிக்கப்படுவனவாக, ஜீவேசுரரைமித்தை என்று சாதியாத மழவராயபிள்ளை யவர்களுடைய கொள்கையே பிரபல சுருதிகளுக்கு இணக்கமாயும் சிரேஷ்டமாயும் கொள்ளற்பாற்று. சாந்தோக்கியத்தில்,

ஸவெஷு ஆதஸு ।

"எல்லா ஆன்மாக்களினும்" எனக்கூறப்படுதலால் ஆன்மாக்கள் பலவாதல் தெளியப்படும்.

யஸ்ய ஆதாஶரீரு ।

"எவருக்கு ஆன்மா சரீரம்" என்று மத்தியந்தின சாகையிலே கூறப்படுதலானும்,

ஆதநெ்யவாதாநம்வஶ்யதி ।

"ஆன்மாவில் ஆன்மாவைப் பார்க்கிறுன்" எனப் பிருகதாரணியத்திற் கூறப்படுதலானும் இன்னும் அனேக உபநிடதங்களில் சீவான்மா பரமான்ம பேதங்கள் கூறப்படுதலானும், இச்சீவான்மாக்கள் மாயாவாதோபநிடதங்களிற் போலக் கற்பிதராய் மித்தையாய் ஒழிக்கப்படமாட்டார் எனக் கொண்டன்றே,

நிதெ்யாநித்யாநாம் செதநஶ்செதநாநு ।

"சீவர்கள் நித்தியசேதன பதார்த்தங்களுள்ளே நித்தியசேதனர்" என்று கடவல்லியும்,

நஜீவோ ம்ரியதே ।

"ஜீவன் அழிவதில்லை" என்று சாந்தோக்கியமும் முழங்குகின்றமையால், கைவல்லிய ஞானவாசிட்ட முதலிய மாயாவாதப் பிரகரணங்களைச் சிரேஷ்டப் பிரமாணங்களாகக்கொண்டு பிரபல சுருதிகளோடு முட்டப்போதல் குன்று முட்டிய குரீஇப் போலாம்.

இதனையுற்று வாதிக்க முயல்வோர் நாம் முதற்கண்ணே வரைந்து பகிரங்கப்படுத்திய "சூதசங்கிதையிலே மாயாவாதியர் கட்டிய கோட்டையின் அடியை நியாய பீரங்கியிட்டு உடைத்துப் பெயர்த்துவிடல்" "மாயாவாதத்தைச்செயித்து உயர்த்திய சைவசித்தாந்த வெற்றிக்கொடி" என்றற் றொடக்கத்த விஷயங்களுக்குத் தக்க விடையிறுத்து வாதத்திற் றலையிடுவாராக. சுருதிபுராணப் பிரமாணங்கொண்டு வாதித்தால் நாம் வாதத்திற் றலையிடுவேமன்றி வாளா வைதல் அறிவிலார் செய்கையாதலில் அதனைப் பொருட்படுத்த மாட்டேம்.

ஸ்ரீ காசிவாசி-சேந்திநாதையர்.

---

## THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப்பயிற்சி.

---

### XII. பாஷைகள்.

உள்ளப்பயிற்சியாகிய இப்பகுதியை, பாஷையுணர்ச்சியைக் குறித்துச் சில விடயங்கள் கூறி முடிப்பாம். பின்வருஞ் சிறுவிதிகள் இயற்கைத்தொடர்புற்றனவெனப் பல்லாட்டை அனுபவ முறை தெரிக்கும். ஆதலான் வழங்கற்பாலன வெனக்கோடலாகும்.

(1) கூடும் வரையில் முதலில் நல்லாசிரியரை அடைதல் வேண்டும். அவரே நுமது முயற்சியழியச்செய்யும் இடர்ப்பாடுகளைத்தீர்த்து, வீண் காலப் போக்கைத் தவிர்த்துத் தவறுயுச்சரிக்கும் விதம்படிவதினின்றும் உம்மைக் காப்பாற்றுவர். அன்றேல், அப்போலி உச்சாரணங்களைப் பின்களைதல் கடினமாய் முடியும்.

(2) இதனை யடுத்து, தமிழ்ச்சொற்கள் இடைப்புகாது கற்கவேண்டும் பாஷையிற் கண்ணிற்படும் ஒவ்வொரு பொருளையும் உரக்கக்கூறல் வேண்டும். வேறு விதமாகக்கூறுமிடத்து, கற்கத்தொடங்குங் காலமுதற்கொண்டு, முன்னுள பொருள்களை அப்பாஷையிலேயே நினைத்து, அப்பாஷையிலேயே கூறல்வேண்டும். அப்பாஷை நூலிற்கும் உமது மனதிற்குமே யன்றி, முதலில் உமது செவியிற்கும் நாவிற்கு முரியதென்பதும் நினைவிலிருக்கட்டும்.

(3) பெயர்ச்சொற்கள் உரு பேற்பதை மனதில் நிறுவுமின்.

(4) முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை இரண்டையுமறிந்தவுடன் நிகழ்காலத்திற் சாதாரணமான தன்மைவினை யொன்றை யெடுத்துச் செய்வினைக்குரிய விலக்கணப்படிச் சிறு வாக்கியங்களியற்றி உரக்கக்கூறுமின் உதாரணம் :—நான் சூரியனைப்பார்க்கிறேன்.

(5) பெயரினுக்கு அடைமொழி கொடுத்து இவ்வப்பியாசத்தை விருத்தி செய்க. உதாரணம் :—நான் ஒளிசெய் சூரியனைப்பார்க்கிறேன்.

(6) இவ்விதமாகப் படிப்படியாய் இடைநிலைகளை மனப்பாடஞ்செய்து பிறகு தக்க பெயர்ச்சொற்களோடு சிறு வாக்கியங்கள் செய்து, எப்போதும் தமிழைத்தவிர்த்து அந்நூதன பாஷையிலேயே நேரில் நினைத்துக்கொண்டு சொல்லுக. பாஷையுணர்ச்சியின் ஒவ்வோர் அறிவுடைப்பயிற்சியிலும் சாரமான இவ்வம்சத்திற் கண்ணுயிருப்பதில் உண்மை இடையூறு ஒன்றுமிலது. மற்று, மனோபாவத்தையடுத்த போலி இடர்ப்பாடும், மிகவும் பெரும்பாலும் தீய வழக்கத்தின் பிடிமானமுமே இடையூறுகளாம்.

(7) பெயர் வினைச்சொற்கள், வாக்கியங்கள், இவைகளின் எளிய மாதிரிகளில் தீவிரத்தேர்ச்சி செவியும் நாவுமடைந்த பின்னரே ஒழுங்குடை முறையில் மாணுக்கன் மிகக்கடினமும் கலப்புமுற்ற மாதிரிகளுக்குச் செல்லல் வேண்டும்.

(8) சூத்திரங்களிலிருந்து மட்டுமே உடனே உதாரண முகத்தான் தெளியாது, ஒன்றும் அறிய வேண்டுவதில்லை. அல்லது, செவி நாவின் பயிற்சியின் காரணமாய் உண்டாகும் உதாரணங்களினின்றுமே சூத்திரங்களை யேற்படுத்துக. விதிகள் சிலவாய்ப் பல விஷயங்களையுந் தழுவல் வேண்டும்.

(9) பலவித ஒழுங்குப்பிறழ்வுகளும் பழக்கத்தில் நேரும்போது கற்பதே நேரிது.

(10) முதலில் எளிய கதைகள் எதுவாயினும் படித்தலாகும். ஆனுற் சாதாரணமாய் நடந்து வருவதுபோற் சிந்தித்துப்பேசுவதற் கிடாகப்படிப்பதைக் கோடல் ஒருபொழுதுங்கூடாது. இச்சார்பினை நிமிர்ப்பதற்கு நல்ல வழி யாதெனில் உயிர்நூற் பொருள்களையாதல் விஞ்ஞைப் பொருள்களின் மாதிரிகளையாதல் எடுத்துச் சுயபாஷைக்கலப்பில்லாது, அவையிற்றின் அங்கங்களை உரக்க விவரிப்பதேயாம்.

(11) படித்தல், விவரித்தல் இவைகளின் அப்பியாசங்களனைத்தும் மீட்டும் மீட்டும் செய்தல்வேண்டும். "சிலநாட் பழகிற் சிலவுந்தெரியா-பலநாட்பழகிற் பலிக்குமென்க." பாஷையுணரும் முதற்படிகளிற் கற்கத்தக்க எப்புத்த

கத்தையும் ஒரேமுறைபடித்தல்கூடாது. "நூலினை மீளவுநோக்கவேண்டா சூத்திரம் பல்காற்பார்க்கவே துணிக."

(12) கூடுமோகிற் படிப்பு உமது மனப்பிடிமானத்தை ஒட்டியேயிருக்கட்டும். நூல்விஷய மினியதாயிருப்பின் உமதுவிருத்தியு மிரட்டைப்பங்காகும். விஷயத்தைக்குறித்து முன்னரே சிறிதுணர்தல் பேருதவியாம், இதன்காரணமாகச் சமயநூற்பயிற்சியுற்றவர்க்குப் பிறபாஷையறிவதில் அப்பாஷையிலியற் றியுள பகவத்கீதை பயன்படுத்தச் சிறந்த நூல்களுளொன்று.

(13) படித்துச்செல்லும்போதே சுயபாஷைப்போக்கிற்கும் அவ்வயற்பாஷை நடையினுக்குமுள வேற்றுமைகளை உற்றுநோக்குக. மிகவும் பாஷைநடையினையடுத்த மொழிபெயர்ப்பில் தெளிவாய் அவையிற்றினை எழுதுகருவிகொண்டு குறிப்பிட்டுவைத்துக்கொண்மின். சின்னாளானபின்னர் வைத்திருக்கும் மொழிபெயர்ப்பை மறுபடியும் அப்பாஷையினுக்கே மாற்றுக.

(14) உமதுகுறிப்புக்களை ஒழுங்குபடுத்தற்கும், வேண்டாமாகில் திருத்தற்கும், முறைப்பட்டவிலக்கணமொன்றை, பயனுடைத்தெனத் தோற்றுமட்டெடுத்துப்பார்க்க. ஆனாற் பயிற்சிக்குப் பின்னரே இலக்கணம் வரவேண்டும். முன்னர்க்கூடாது.

(15) அனேக இலக்கணங்களிற் காணும் உதாரணத்தினின்றும் ஒழுங்குடனெடுக்கப்பட்ட பொதுப்பட்டவிதியொடு அமையற்க. மற்று, பொதுவாயெங்கும் பொருந்தும் இலக்கணத்தைப்பற்றியதாயினும் சிறப்பிலக்கணத்தைச் சார்ந்ததேயாயினும் விதியின்காரணம் யாதெனநாடல்வேண்டும்.

(16) பாஷைநூற்பகுதிகளாகிய கவிசரித்திரத்தையும் பேசும் முறையையும், சொற்பொருளாராய்ச்சியெனக் கூறப்படுவதையும் கற்றல்வேண்டும். ஆங்குவெளிப்படும் நீதிகள் பகுத்துணருமறிவுடன் உமதுபயிற்சியை தீவிரடையக்காரணமாகும். இல்லாவிடின் பெரும்பாலும் பயிற்சி ஞாபக சக்தியின்மீது காரணமின்றிப் பாரமுற்றதொழிலைச் சுமத்தலாகும்.

(17) எப்போதும் பழக்கமே இன்றியமையாதது. முதன்முதலில் பாஷைநம்மதாகவேண்டும். இப்பழக்கம் இடைவிடாதபயிற்சியாலும் இடைவிடாத சல்லாபத்தாலுமே அடைதல்கூடும். சம்பாஷிக்கத்தகு வேறொருவருமில்லையேல் தாமே தனித்து உரக்கப்பேசிக்கொள்ளலாம். ஆனால் மனமும் கண்களுமட்டுமேயன்றிச் செவியும் நாவும் பயிற்சியடைதல்வேண்டும் கற்பதில், சிறந்தநூல்கள்மட்டுமே யொருவன்கற்கலாகாது. கையிலகப்படும் நூலெதனையு மாவலுடன் விழுங்கல்வேண்டும். ஒரேநூலினைத் திட்பநுட்பமாய்க் கற்றல்கூடாது. அஃதொரு விசேடவாற்றலாகக் காட்டுமிடத்து நன்றேயாகும். ஆயின், பாஷையின் பொது அம்சத்தில்பெரிதுமூடாட அவனறிதல்வேண்டும். பொதுவான பாஷையிற்போக்கித் தீவிரப்பயிற்சியாற் கை

தேர்வதன்முன்னர் நுட்பொருள்களிற் செவ்விய திருத்தத்தை நாடலிய லாது. உதாரணமாகக் கம்பராமாயணத்திற் பலப்பலப் பாடபேதங்களிலாதல் ஆராய்ச்சிசெய்பவரின் மேதாவித்தனமான ஊகிப்புக்களிலாதால் நுழைய ஒருவன் தொடங்குவதன்முன்னர் நூலினையே இருபான்முறையேனும் படி த்தல்வேண்டும்.

(18) நேரிதாய்க் கூறப்படுங் கட்டுரைவகுத்தல் என்பது யாம் மேற்சுருக்கி விடுத்துள பேசிப்படித்தற் பயிற்சி, மொழிபெயர்த்து, மறுபடியும் மொழிபெயர்த்தற் பயிற்சியாகிய இவற்றினின்றும் திரண்டு முற்றிய முடிவுப் பொருளாகும். இவ்வப்பியாசத்தில் உயர்ந்தோர் போக்கை அனுசரித்து எழுதுவதே சிறந்த விஷயம். சொல்லகராதியையும், சொற்றொடரகராதி யையும் நோக்கிவரைவதன்று. ஒரு குறித்த நடைக்கு மேற்கோளாகும் ஆசி ரிய ரொருவரைத் தெரிந்தெடுமின். அவரது சொற்றொடர்களைக் கூட்டுணவு செய்ம்மின். சுயபாஷைக் கலப்பின்றி நேராக அவற்றைப்போன்றே நீவிர் கொஞ்சம் செய்ம்மின். இவ்வாறு தேர்ச்சியடைந்தபின் அந்நடையில் உம்மு டைய அம்ஸங்கள் பலவற்றையுங் கூட்டத் துணியலாம். ஆதி நூல்களினின் றும் மொழிபெயர்க்கலாம். ஆனால் அது ஆதியிற் கூடாது. அப்பிற பாஷை யைப்போன்று நேரே செய்வதாற் செவியைப் பண்படுத்திப் பின்னரே சுய பாஷையினின்றும் மொழிமாற்றும் மிகக் கடினமான தொழிலைப் பயன்படச் செய்ய முயலுதல் வேண்டும்.

உள்ளப்பயிற்சி முற்றிற்று.

ச. கி. சுந்தராசாரியன்.

---

# KASI KANDAM.

# காசிகாண்டம்.

---

(Vol. V. 422-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் நாரதர் வீற்றிருக்க வலிமையுடைய விந்தமானது, "எல்லா வுலகங்களையும் சுமப்பவன் நானாயிருக்க மற்றப் பர்வதங்களெல்லாம் சுமக்கு மென்னல் சொல்லளவே யன்றி வேறென்ன? பொன்னை மிகுதியும் தன்னி டத்திலுடைத்தாயிருப்பதால் மேருவும் பொலிவுடையதா யிருக்கின்றது; அத னாலேயே அது எனக்கு நிகராமா? அதான்று, அவுணர் கூட்டமிருந்த உதயகிரியும், பொதிய வெற்பும், நிடத கிரியும், நீலகிரியும், இமயகிரியும், ரேவதகிரியும், மந்தரகிரியும், சையமும், கிரவுஞ்சமும், முதலான மலைகள் தான் எனக்கு நிகராமா? இவையெல்லாம் இப்பூபாரம் தாங்கும் வலியுடையன வா? இல்லையே ஆகையால் நானே எவற்றிற்குந் தலைவன் என்று சொல்லுவ

கென்ன தடையிருக்கின்றது?" என்று சொல்லிற்று. இவற்றை யெல்லாம்கேட்டுக்கொண்டிருந்த நறிய தாமரை மலரின் கண் வைகும் வேதாவின் புதல்வரானவர், கற்றைவார் சடையான் வைகும் கைலையே முதலாக அநேக பெருமை தங்கிய பர்வதங்களிருக்க இதனுக்குற்ற மனச்செருக்கு நன்றென, நக்கு, கலகஞ்செய்து அதன் கர்வத்தை யடக்குவான் கருதி. அவ்விலங்கலை நோக்கி, "ஓ! விந்தராசனே! நான் ஒருகால் மேரு மலைக்குச்சென்றிருந்தபொழுது அது தான் தான் பர்வதங்களுக்கெல்லா மரையனென்றும், தன்னைத்தான் விசும்பூடபோயும் சூரியன் முதலானவர்கள் வலம் வருகிறார்களென்றும், ஆகையால் தனக்குள்ள பெருமை யாருக்கும் கிடைப்ப தரிதென்றும் என்னிடத்தில் சொல்லிற்று; உன்னைக் கொஞ்சமும் மதியாது கூறினவார்த்தையைக் கேட்டுச் சகிக்காதவனாய் நின்பாற் சாற்றுவான்புக்கேன்; நான் உட்காரும் பொழுது நெட்டுயிர்ப் பெறி[illegible]துதும் அந்தக் கடூரமானசொற்களை நினைந்தேதான்; பூமியைப் பரிப்பவனும் பர்வதராசனும் நீயாயிருக்க அது அப்படிச் சொல்லவொண்ணுமோ? இனி நீ சும்மாவிருந்து காரியமில்லை. இதற்குத் தகுந்த ஏற்பாடுநீ செய்யவேண்டியது; இல்லாவிடின் நீ உன்னுடைய பெருமையை இழக்க வேண்டியதுதான்" என்று கூறிப் பகையை மூட்டிவிட்டுவிட்டு, ஆசிகளைக் [illegible]றிப் பின்னர் பொன்னகர் நோக்கிச் ! செல்வாராயினர்.

ஐம்புலன்கள் செல்லும் வழியில் மனத்தைச் செலுத்துவோர்களுடையவும் [illegible]நக் கேற்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யாது கொன்னே காலத்தைப் [illegible]வர்களுடையவும், அன்பினீங்காச் சுற்றத்தவர்கள் இழிவாகப் பேசும் [illegible]ப்துகொள்ளுகிறவர்களுடையவும், வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகுமோ?

[illegible]படிப்பட்டவருக்கும் மனத்தில் ஒரு வருத்தம் வந்து தோன்றினால் [illegible]ரது புத்தியையும், மிகுந்த பசியையும், அழகையும் இடைவிடாத [illegible]யையும். ஊக்கத்தையும் பராக்கிரமத்தையும், நந்தலிலுயிரையும், நல்ல [illegible]யும் அழிக்கும்.

ஒருவனுக்கு மிகுந்த உடற்கொதிப்புண்டாயின் ஔஷதாதிகளால் அவ[illegible] சௌக்கியப்படுத்தலாம், ஒருவனுக்கு மனக்கொதிப்பு உண்டாயின் இம்[illegible]ணுலகத்திலுள்ள வயித்தியரோ அதனை மாற்றவல்லார்?

ஆகையால், அவ்விந்தத்திற்கு மனக்கொதிப் பதிகரித்தமையின் கோபமேற்கொண்டு அது, "உண்மையான சாஸ்திரங்களிற் பயின்ற நாரதரும் பொய்ம்மொழி கூறுவரோ? கூறமாட்டாரே. அவர் சொன்ன மாற்றம் உண்மையே" எனச் சிந்தித்தது. பொறாமையும் பேராசையும் கொண்ட மாக்களுக்கு எதிலார் பகரும் கூற்றில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. அப்பேர்ப்பட்டவர்களுக்குநல்லது கெட்டதாகவும் கெட்டது நல்லதாகவும் தோன்றும். அவர்கள் பழிபாவங்களுக் கஞ்சார், பிறர் நலத்தையும் பாராட்டார், "எனக்கு ஒரு கண்கெட்டாலும்கெடட்டும்எதிரிக்கு இரண்டுகண்ணும் கெட்டுப்

போகவேண்டும்" என்னும் கருத்துக்கொண்டவர்களாவார்கள். இப்பேர்ப் பட்ட துர்க்குணப் பேய்களால் பீடிக்கப்பட்ட விந்தமானது, "மேருவானது நம்மோடு சண்டைக்கு ஆரம்பிக்குமாகில் நம் மிகுந்த வல்லமை நன்று நன்று; அம்மேருவுக்கு இப்பேர்க்கொத்த கர்வம் உண்டாவதற்கு என்ன காரணம்? ஆதவன் நாடோறும் அதைச் சுற்றி வலம்வருவதனுலன்றே ? நல்லது. அவன் இன்றுமுதல் எப்படிச் சுற்றிவருவான், பார்க்கிறேன்; அப்பரிதியின் விசும்பாற்றைத் தடுத்துவிட்டால் அவன் என்னசெய்வான் ; இதோ ! இப்பொழுதே தடுக்கிறேன்" எனக்கருதி, திரிவிக்கிரமாவதாரமென்ன ஆகாய வெளியில் உயர்ந்து நின்று, பழமறையந்தணர் தங்கடங்கள் காலைக்கடனை யிறுத்தற்கெண்ணுபு கனைகடன் முகட்டிலிளஞ்சூரியனை எதிர் பார்க்குந்தன்மை போல், ஆதவன் வரவை எதிர்பார்த்து நின்றது.

## தேவர்கள் பிரமலோக மடைந்தது.

அருமையாகிய வேதங்களிற்பழகும் அந்தணர் தங்கள் காலை வந்தனம் செலுத்தவும், தாமரை மலரானது மலரவும், அம்மலரிலுள்ள கள்ளை மாந்தி வண்டுகள், இசை பாடவும், விரிந்த கிரணங்களுடைய விண்ணவன் கருங்கடன் முகட்டிற்றோன்றினன். அவ்வாறெழுந்த வெய்யோனனவன் அதற்கிறைவன் திக்கினை நீங்கிச்செந்தமிழ்க்கடவுள் வைகும் பொதிய மால்வரையை நோக்கிச் செல்லா நிற்புழி புரவிகள் தாண்டச்செல்கில வாதலால், "நாம் போகும் வழியைத் தடுப்பவர் எப்படிப்பட்டவரா யிருக்கவேண்டும்" என ஊகித்தறிந்து, வீரக்கழலை யணிந்த அருணனனவன் பரிதியை வணங்கி, "எல்லொளி மன்னவ ! விந்தமானது தனது கட்டளையின்றி பொன்மலையாகிய மேருவைவலம் செய்யப்படாதென்று தனது வலியால் நமது தேரைச்செல்லவொட்டாது தடுத்திருக்கின்றது" என்று சொன்னன். இம்மாற்ற முணாக்கக்கேட்டு இருட்குறும் பெறியும் வெய்யோன் தேரினின்றிழிந்து, விந்தமானது அகாய முழுவதையுமறைத்த காட்சியைக்கண்டு, அதிசயித்து, "ஓ ! விந்தராஜனே ! நீர் இவ்வாறு என்வழியைத் தடுப்பது நியாயமல்ல ; நான் ஈண்டு இன்று தங்கி விடுவேனுகில் உலகின்கணுள்ள உயிர்களெல்லாம் படாத பாடுபடும், முனிவர்களுடையவும், தேவர்களுடையவும் சாபம் உமக்கு நேரிடும், உமக்கும் மேருவுக்கும் மாச்சரியம் உண்டானல் யானேகும் வழியை யா தடுப்பது ? "தென்ன மரத்தில் தேள் கொட்டப் பனைமரத்திற்கு நெறி கட்டினுற் போலாயிற்றே ; நீர் எவ்வளவோ தெரிந்தவராயிருந்து இப்படிச் செய்யத் தகுமா? நீரும் மேருவும் எப்படியோ குடுமிக்குக் குடுமி பிடித்துக்கொள்ளுங்கள், யானேகும் வழியை இப்பொழுது விட்டுவிடும்" என்று சொல்ல, அவ்விலங்கல் கேளாது "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று மறுத்து விட்டது.

இவ்வாறு சூரியனுனவன் வழிமறிக்கப்பட்டு நின்று போனதினால், வடதிசையிலும் கீழ்த்திசையிலும் மருவி வாழ்கின்ற ஜீவகோடிகளெல்லாம் பரந்தவெயிலின் கொடுமையினால் சகிக்க முடியாது துன்பத்தை யடைந்தனர். தென்றிசையிலும் குடதிசையிலும் குழுமி வாழ்கின்ற உயிர்ப்பிராணிகளெல்லாம் நெருங்கிய இருட்கூட்டத்தில் ஒன்றுந்தெரியாமல் மதிமயங்கி மனம் வருந்தினர். காய்கின்ற கிரணங்களையுடைய சூரியன் நின்று போனபடியால் வேதசம்பந்தமாகிய யாகங்கள் முதலான காரியங்கள் செய்யமுடியாமல் போய்விட்டது. யாகங்கள் இல்லாமையால் ஆர்கலிசூழ் உலகின் கணுள்ள ஆன்மாக்களெல்லாம் துன்பக்கடலில் ஆழ்ந்தன. எல்லாவற்றையும் உண்டாக்கி அவற்றைப் பாதுகாத்துப் பின் அழித்தலும், அவ்வப்புண்ணிய காலங்களில் ஒவ்வொருவரும் விரதாதிகளை யனுஷ்டித்து ஒழுகுவதற்குக் காலத்தைக் கணித்துக் கொடுத்தலும் வெங்கதிர்ப்புனிதனல்லால் ஆற்றுநர் வேறில்லாமையால் உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம் சித்திரப்பாவையை யொத்திருந்தன.

ஓர் புறம் வெயிலும் மற்றோர் புறம் இருளுமா யிருப்பதால் உரகரும், தேவரும், முனிவரும் அத்துன்பத்தினின்றும் நீங்கும்பொருட்டு பதுமாசனனை யடைந்து,

ஐயனே போற்றி யமலனே போற்றி
மெய்யனே போற்றி வேதனே போற்றி
பிரமனே போற்றி யுருவனே போற்றி
தெரிவரும் பொருளே தேவனே போற்றி
முச்செய றன்னில் முதற்செய லுடையாய்
விச்சையு மாகி யவிச்சையு மாகி
இறைஞ்சுநர் பவத்தை யெளிதினி லகற்றி
மறைப்பொரு ளவர்க்கு வழங்குவ போற்றி
வெருவருங் காம வெஞ்சுற வெறிய
இருவினைத் திரைக ளெற்றும் பிறவிக்
கடலு ளெய்திக் கலுழு மவர்க்கெலா
மடலுறுஞானத் திருவருட் புணையை
யளித்துக் காக்கும் மமரா போற்றி
அளியினம் பரவு மங்கோ கனக
மமர்ந்தினி திருக்கு மம்பா டன்னை
முகத்தினி லுடைய முதல்வா போற்றி.

என்று பலவாறு துதித்து தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தை எடுத்தோதி வணங்கி நிற்க, நான்முகன் பின்வருமாறு தேறுதல் சொல்லலுற்றான்.

"நீங்கள் என்னைத் தோத்திரம்செய்ததால் மிகவும் சந்தோஷம், அடைந்தோம்; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை, தொழுத்தகு மறைகள் போற்றுந் தூயவீடளிப்போம், நீங்கள் வெந்துயர் நீங்குமின், சிவபெருமானையடுத்து முத்தியின்பத்தைப் பெறும் பேற்றைக் பெற்றீர்கள், வேதங்களும், யாகங்களும், * விகரற்ற சத்தியமும், விதியும், பரிசுத்தமும், பெருமை தங்கிய தவமும், எல்லாம் எமது வடிவத்தைப்பெற்று எம்மைப்பிரியாமல் இனிது வைகும்.

ஐம்புல னடக்கி யந்தக் கரண
நான்கையுஞ் செற்றோர் நான்மறை தெள்ளி
மறநெறி யோம்பா தறநெறி நின்றோர்
உறுபயன் விழையா தோங்கும் விரதம்
பூண்டோர் பத்தினிப் பெண்டி ராவின்
மாண்டகு குலமினி தருந்தப் பைம்புற்
சாலக் கொடுத்தோர் தவத்தின் மிக்கோர்
பிறர்மனை விழையார் பெற்றதாய் தந்தை
இருபதந் தன்னி லறுபத முரலு
நறுமலர் தூவி நாளும் பணிவோர்
மறுவறு வேதக் கிழவர் பாதத்
துறுபுன லுகர்வோ ருயர்ந்த கங்கையின்
கரையினி லுடலங் கவின்பெற நீத்தோர்
மறையுடைக் கடவு ணிறைவுடன் வைகும்
மாண்பிர யாகையில் மாகநீர் படிந்தோர்
களிதருங் காமக் கழிமலங் கழுவுவோர்
ஒளிமதி யயன மளியுடன் சார்ந்தோர்
அபய மளித்தோ ருபையகோ முகியைச்*
சற்பாத்திரத்திற் றானஞ் செய்தோர்
இறந்தோர்க் கெல்லா மேல்வுறக் கயையில்
அன்ன மீந்தோர் அங்கயற் கண்ணி
தன்னொடு கொன்றை தரித்த கடவுளை
மன்னிய மனத்தராய் மாத மொன்றே
யிடையிட் டுண் போ ரீங் கிவர் யாரு
மெம்பா லினிது வைகிப் பின்னர்

* மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யெவையு நிலைநிறுத்து
மெய்யா லழல்கால் கதிர்பிறவுந்தந்தந் தொழிலின் விலகாவா
மெய்யே யெவைக்கு மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரம பதமெனவும் புகன்றான் வினைதீர் காசிபனே.

நீங்கருங் காசி தன்னிற் பிறந்து
கோங்குறழ் முலையாள் பங்கன் குணாகழற்
பங்கயம் போற்றி யங்கவ னருளான்
மீளாப் பேற்றை யடைவர் மாதோ.

(இன்னும் வரும்.)

சிதம்பர முதலியார்.

---

# VIKRAMORVASIYAM.

## விக்ரமோர்வசீயம்.

---

(சிறிதுபோழ்து வாளாவிருந்து. மெல்ல கண்களைத் திறந்து களிப்போடு)

காதலிதான், நிச்சயம்.

**உருப்பசி.**—(கண்ணிருகுத்து) வெற்றிபெறுக மகாராசர்.

**அரசன்.**—

சீற்றத்தாய் நின்பிரிவிற் சேர்ந்தவிருள் வாய்மூழ்கல்
எற்றவென்ன லாவி யிழந்தோனற் பின்னருயிர்
போற்கொளப்பட் டாயம்ம போந்து. (103)

**உருப்பசி.**—வயமின்றிக் கிடந்த பொறிகளையுடைய எனது கண் கூடாக்கண்ட செய்கையினர் மகாராசர்.

**அரசன்.**—'வயமின்றிக் கிடந்த பொறியினேன் யான்' என்னும் நினது பதப் பொருள் அறிகின்றிலேனு ?

**உருப்பசி.**—சொல்வேனிதனை யிப்போழ்து, தெளிவுடையா ராகுக மகாராசர்! எதனுல், கோபவசமேய்ந்த என்னுல் இந்நிலை மாறுபாடு அடைவிக்கப் பட்டனர்.

**அரசன்.**—யானிப்போழ்து அருள்விக்கத்தக்கேனல்லேன்; நின் பார்வையாலே புறக்கரணங்களோடு கூடிய எனது உட்கரணம் தெளிவினது; ஆகையால், எங்ஙனம் இத்தனைநாள் என்னைவிட்டிருந்தாய்சொல்.

**உருப்பசி.**—கேட்பீராக மகாராசரே! பகவான் குமாரஸ்வாமி நித்தியமாய குமார விரதம் கைக்கொண்டு அகலுஷமென்னும் பெயரையுடைய கந்த மாதனமலைக்காட்டின் நீர்நிகர்த்த விடத்தில் இருந்தனர்; ஏற்படுத்தப் பட்டது அவரால் இக்கட்டளை.

---

உபய கோமுகியாவது :—கன்றுந் தாயுமாகத் தானஞ்செய்தல். கருக்கொண்ட பசு பிரசவிக்கும்போது கன்று வெளிவந்தும் வராமனு மிருக்கும்பொழுது வேதியருக்களித்தல்.

அரசன்.—எத்தகைத்து ?

உருப்பசி.—சொல்வேன் ; "எம்மடந்தை இவ்விடத்தை யடைகின்ருள், அவள் கொடியயுருவினளாய்ப் பரிணமிப்பாள் ; கௌரீசங்கம நீய மணிநிமித்த மின்றி உய்வுருள்" என்று; நான்குருசாபத்தான் மடமைய டைந்துள்ள மனத்தினளாய், தேவர்கட்டளையை மறந்து கைக்கொள் ளாத வேண்டுகோளினளாகிக் குமாரவனத்துட் புகுந்தேனுயினேன் ; புகுந்த பின்னர், இவ்வாறு வாசந்திக்கொடியாக ஆயினேன்.

அரசன்.—எல்லாமும் தக்கன ;

புணர்ச்சியி னயர்ச்சி யால்யான் பொன்னணை மீது தூக்கம்
புணரினும் வேற்று நாட்டுட் புக்கேனு வெங்ஙீ [illegible]
உணர்திமெல் லியலா யந்நீ யுன்றனை நீண்ட காலந்
தணந்தவென் பிரிவை யெங்ஙன் ருங்குபு நின்ருய் மன்னே. (104)

முனியால் நின்சேர்க்கைக் காரணம் எவ்வாறு சொல்லப்பட்டது. அந்த இது அடையப்பட்டது.

(என்று மணியைக் காட்டுகின்ருன்.)

உருப்பசி.—அம்ம சங்கமநீயம் ; ஆகையாலேதான் மகாராசரா்ற் கட்டிக்கொள் ளப்பட்ட மாத்திரத்தில் இயற்கை யடைந்தேனுகின்றேன்.

(என்று மணியை எடுத்துக்கொண்டு வணங்குகின்ருள்.)

அரசன்.—சுந்தரி ! கணமாத்திரம் இங்ஙனமே யிருப்பாயாக.

நெற்றிமிசை வாய்மணியி னீண்டிலங்கு செங்கதிரால்
சுற்றுறுமிந் நின்வதனஞ் சூர னிளவெயிலால்
செம்மைநிறஞ் சேர்ந்துள்ள செங்கமலத் தின்னழகை
அம்ம தரித்திருக்கு மால். (105)

உருப்பசி.—பட்டணத்தை விட்டு வந்த உமது நாள்கள் பலவன்ருே ; பிரசை கள் என்னைப் பழிப்பர்கள் ; வாரும் மீள்வோம்.

அரசன்.—நீ எது கட்டளை யிடுகின்றனையோ.

உருப்பசி.—மகாராசர் எங்ஙனஞ் செல்ல விரும்புகின்றனர்?

அரசன்.—

இன்னடை யானே மின்னொளி யென்னுங் கொடியேய்ந்து
பொன்னரி வில்லாம் புதியவோ வியத்துப் பொலிதந்து

நன்னர் விமானத் தன்மை யடைந்து நவமாகி
மன்னிய மேகத் தாலெனை யடைவிப் பாய்நகர்வாய். (106)

(என்று அகன்றனர்.)

நான்காமங்கம்
முற்றிற்று.

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## IDEAL OF UNIVERSAL RELIGION.
## ஸர்வார்ஹ மதலக்ஷண பூர்த்தி.

---

உலக முழுமைக்கும் சமரஸமாயுள்ள ஒரே தத்துவ சாஸ்திரம் ஏதேனு மிருக்கின்றதா? இதுகாறும் இல்லை. ஒவ்வொரு மதமும் தன் கொள்கைகளையே எடுத்துக்காட்டி அவற்றைத்தான் உண்மையென வொப்புக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்துகின்றது. அஃது இவ்வளவு வற்புறுத்துவதுடன் மாத்திரம் இல்லாது, அஃது உண்மையெனக்கூறும் உண்மைகளை நம்பாதவர்கள் பயங்கரமான ஒரிடத்திற்குப் போகவேண்டு மென்றும் பயமுறுத்துகின்றது. அத்தகைய மதத்தாருள் மற்றுஞ்சிலர் அவ்வளவுடன்கூட திருப்தியடையாராய் தாங்கள் நம்பும் வண்ணம் ஏனையோரையும் நம்பும்படி வற்புறுத்துமாறு கத்தியையும் இழுத்துப் பிரயோகிப்பார்கள். இது அவர்களது இயற்கையான துஷ்டத்தன்மையான் உண்டாவதென்று நினைக்கக்கூடாது. மற்றென்னையெனின் அது மனிதர்களது மூளையைச் சம்பந்தித்த மதாவேசம் என்னும் ஒருவித வியாதி விசேஷமாம். இம்மதாவேசத்தாற் கண்டுண்டவர் மனிதர்களுக்குள் மிக்க பக்தி சிரத்தையும் வாய்மையும் உள்ளவர்கள். ஆனால் அவர்கள் உலகத்திலுள்ள ஏனைய ஜன்மத்தர்களைப்போலவே தாங்கள் செய்யும் செயல்களுக்கு உத்திரவாத மற்றவர்களாயிருக்கின்றனர்.

வியாதிகளுக்குள்ளே மதாவேசம் என்னும் இவ்வியாதியானது மிகவும் அபாயகரமானது. மாநுட வியற்கையிற் குடிகொண்டிருக்கும் சர்வவித துஷ்டத்தன்மையும் இவ்வொன்றினாலேயே வெளி யெழும்புகின்றது. கோவம் மூண்டு, நரம்புகள் கோரமாய் முறுக்கிப் பின்னிக்கொள்ள, மாந்தர்கள் புலிகளை மானுகின்றனர்.

இனி புராணத்திலாயினும் ஏதேனும் பொதுத்தன்மை உளதா? புராண ஸாபரஸ்யமேனும், எல்லா மதங்களும் ஒருங்கே ஒப்புக்கொள்ளும் சர்வார்

---

* நரகம்-இது கிறிஸ்தவநூல் வழக்கு.

ஹடமான புராண சம்பிரதாயமேனும் ஒன்றுண்டோ ? நிச்சயமாய் இல்லவேயில்லை. எல்லா மதங்களிலும் ஒருங்கே ஒப்புக்கொள்ளும் புராணக்கதைகளிருப்பினும், ஒவ்வொரு மதமும் ' என் கதைகளை வெறுங்கற்பனைக் கதைகளல்ல" வென்று கூறுகின்றது. இதனைத் திஷ்டாந்த வாயிலாகச் சிறிது ஆராய்வாம், கேவலம் நிதர்சனார்த்தமாகப் பேசுகின்றேனே யன்றி எம்மதத்தையுங் கண்டிப்பதில் எனக்குத் தாற்பரியமில்லை.

கடவுள் சுபோதவடிவந் தாங்கி உலகத்திற் தோன்றினாரெனக்கிறிஸ்தவர் நம்புகின்றனர். அவர்களுக்கிது உண்மையான சரித்திரமேயன்றி கற்பனைக் கதையன்று. கடவுள் பசுவின்கண் ஆவிர்ப்பவித் திருக்கின்றாரென இந்துக்கள் நம்புகிறார்கள். அங்ஙனம் நம்புவது உண்மைசரித்திர மன்றெனவும் வெறும் பொய்க்கதை யென்றும் மூடபக்தியென்றும் கிறிஸ்தவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்கள். ஒரு விக்கிரகத்தை ஒரு பெட்டிவடிவமாய்ச்செய்து அதின் இரு பாரிசத்திலும் தேவ தூதர்களின் தூய உருவங்களை யமைத்தால் அதனைப் பரம பவித்திரஸ்தானமாகிய கர்ப்ப கிருஹத்தில் வைக்கலாமென்றும் பகவானாகிய யெஹோவாவின் திருவுள்ளத்திற்கது மிகவும் உகந்ததென்றும் யூதர்கள் கூறுகின்றனர். ஆனால் அதனை ஒரு சுந்தரபுருஷ வடிவமாகவேனும் ஸ்திரீ ரூபமாகவேனும் அமைக்கின் அதே யூதர்கள் அதனைக் கண்டமாத்திரத்தில் "இஃதொரு ம்பங்கரமான விக்கிரகப இதனை யுடைமின்" என்பார்கள். இதுதான் புராண விஷயத்தில் நமக்குள்ளிருக்கும் ஐக்கியம் ! ஒருவன் எழுந்து நின்று 'எனது ஆசாரியன் இன்ன இன்ன அற்புதச் செயல்களைச் செய்தா' ரென் றுரையானாயின், அஃதெல்லாம் வெறும் மூடபக்தியென ஏனையோர் கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் ஆசாரியனே அதைவிட இன்னும் ஆச்சரிய கரமானதொரு செயலைச் செய்திருப்பார் யார். அதையவர்கள் உண்மைச் சரித்திரமெனக் ;கொள்ளாநிற்பர். யான் கண்டறிந்தவரையில் இவ்வுலகில் எவரும் சரித்திரத்துக்கும் புராண கதைகளுக்குமுள்ள சூக்கும பேதத்தை இக்கனவான்களின் மூளைகளிலுள்ளவாறு கண்டறியக் கூடவில்லை. இத்தகைய கதைகளெல்லாம் எவருடைய வாயினும், ஏகதேச சிறிது உண்மைச் சரித்திரம் கலக்கப்பெற் றிருக்கக் கூடுமாயினும், வாஸ்தவத்திற் கற்பனைகளேயாம்.

இதற்கடுத்தது கர்மம். ஒரு மதக் கோட்பாட்டினர் ஒரு வகையான கர்மத்தை யனுஷ்டிக்கின்றனர். அவர்கள் தாம் அனுஷ்டிக்கும் பத்ததியே பவித்திரமானதென்றும் ஏனைய பதங்களுள் கர்மானுஷ்டானங்கள் கேவலந் தாழ்ந்த மூடபக்தியென்றும் கருதுகின்றனர். ஒரு மதத்வனர் ஒருவதையான குறியை பூஜியார்களாயின், மற்றோர் அதைக்கண்டு இது 'அஸஹ்யம்' என்கின்றனர். மிகவுஞ் சர்தாறனைமான ஒரு குறியை உதாரணமாக வெடுத்துக் கொள்வோம். இலிங்கிஹ்ரதமானது உண்மையில் வேறு பொயின் தெள்

ளினும் கிரமேண அப்பொருள் ஜனங்களால் மறக்கப்பட்டு போக இப்பொழுது சர்வேஸ்வரனது அறிகுறியாக மாத்திரம்நிற்கின்றது. இக்குறியை ஈசுவரர் மூர்த்தமாகப் பாவித்து வழிபடும் ஜனங்கள் அதை யங்ஙனமே கொள்கின்றார்களே யன்றி அதைப்பற்றிய வேறெவ்விதமான எண்ணமும் அவர்கள் மனதில் உண்டாவதில்லை. ஆனால் வேற்றுமதத்தானொருவன் அதனைக் காணும்பொழுது அதை யஸஹ்ய மெனக்கொண்டு கண்டிக்கின்றான். ஆனால் இங்ஙனங் கண்டிக்குமவன் செய்யும் அனுஷ்டானம் இந்த இலிங்கமதாநுசாரிக்கு அதைவிட அஸஹ்யமாய்த் தோன்றும். இவ்விஷயத்தை இலிங்கபூஜா சம்பிரதாயத்தினும், கிறிஸ்தவர்களுக்குள் வழங்கும் 'நற்கருணை' யென்னும் சம்பிரதாயத்தானும் விளக்குவாம். கிறுஸ்தவர்களுக்கு இலிங்க பூஜையைக்கண்டால் அஸஹ்யமாயிருக்கின்றது. இந்துக்களுக்கு 'நற்கருணை' யென்னும் கிறிஸ்துவச்சடங்கு அஸஹ்யத்தை யுண்டுபண்ணுகின்றது. ஒரு மனிதனது நற்குணங்களைக் கிரஹிக்குப்பொருட்டு அவனைக்கொன்று அவன் மச்சம் இறைச்சியைத் தின்பதும் அவன் இரத்தத்தைக் குடிப்பதுமான கிறிஸ்தவச்சடங்கானது நரமாம்ச பக்ஷணமென இந்துக்கள் கூறுகின்றார்கள். இது காட்டில் திரியும் நாகரிகமில்லா முரட்டு ஜாதியார் செய்யும் காரியமாயிருக்கின்றது. ஒருவன் தைரியமுள்ளவனாயிருப்பின், அவர்கள் அவனைக் கொன்று அவன் இருதயத்தைப் புசிக்கின்றார்கள். ஏனெனில் அப்படிச்செய்வதால் அம்மனிதனது திடசித்தமும் தைரியமுந் தங்களுக்கு வருமென்பது அவர்களது நம்பிக்கை. பரம க்ரைஸ்தவசிகாமணியாகிய ஸர் ஜான் லப்பக் என்பவர்கூட இதனை யொப்புக்கொண்டு இக்கிறிஸ்தவ ஆசாரமானது மேற்சொல்லிய காட்டுச் சாதியாரின் கொள்கையினின்றே உற்பத்தியாயிருக்கவேண்டுமென்று சொல்லுகின்றார். ஆனால் கிறிஸ்தவர்களின் பெரும்பான்மையோர் அவ்வாசாரத்தின் மேற்கூறிய உற்பத்தியை ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. இவ்வாசாரம் மேற்கூறியபடி பொருள்கொள்வதிற்கிடங்கொடுக்குமென்பது அவர்கள் மனதில் நுழைவதே யில்லை. அதையவர்கள் பரிசுத்தமாகக் கொண்டிருக்கின்றமையின் அதுவேதங்களுக்கு புருஷார்த்தமெனக் கருதியிருக்கின்றனர். ஆகையால் கர்மங்களிலும் சர்வ சனங்களும் ஒப்புக்கொண்டு அநுஷ்டிக்கக்கூடிய பொதுமையான ஆசாரமென்ப தொன்றில்லை யென்க. அவ்வாறாயின் சமரஸத் தன்மையென்பது யாண்டுளது? சர்வசாதாரண சமரஸ மதம் ஒன்றுளதாதல் எவ்வாறு சாத்தியம்? ஆயினும் அத்தகைய தொன்றிருக்கவே இருக்கின்றது. அஃதென்னவென்று இனியாராய்வாம்.

சர்வ சகோதரத் தன்மையைப்பற்றி யாம் அனைவரும் கேள்வியுறுகின்றோம் இதனை விசேஷமாய்ப் பிரசங்கிப்பான் சங்கங்கள் எத்துணையத்தமா யுள்ளனவென்பதும் யாமறிவேம். இதைப்பற்றிப் பேசுகையில் எனக்கு ஒரு பழைய

கதை ஞாபகத்துக்கு வருகின்றது. இந்தியாவில் சுராபான மானது பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனக் கருதப்படுகின்றது. ஒரூரிலே இரண்டு சகோதரர் இரகசியமாய்ச் சிறிது சாராயமருந்த வெண்ணங்கொண்டார்கள். அவர்கள் சாராயமருந்த உத்தேசித்திருந்த விடத்திற்குமிகவுஞ்சமீபமான ஓர் அறையில் மகா ஆசாரபரரான அவர்களது அம்மான் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். ஆகவே அவர்கள் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன் அவர்களில ஒருவன் மற்ற வனை நோக்கி 'அடே சத்தஞ்செய்யாதே! மாமா விழித்துக்கொண்டு விடுவார்,' என்றான். அவர்கள் குடித்துக்கொண்டே ஒருவனை நோக்கி யொருவராக இருவரும் 'இரைச்சல் போடாதே; மாமா எழுந்து விடுவார்' என்று கத்த வாரம்பித்தனர். இந்தக் கத்துதல் அதிகரிக்கவே மாமா விழித்தெழுந்து விட்டார். அவர் உள்ளே பிரவேசித்து நடந்ததை யெல்லாங் கண்டறிந்து கொண்டார். சர்வத்திர சகோதர பாவமென்பதும் அவ்வாறே யிருக்கின்றது. "யாம் அனைவரும் சமானர்; ஆகையால் யாம் ஒரு கக்ஷியாய்ச்சேர்வோம்" என்று நாம் எல்லோரும் மேற் சொல்லிய குடியர்கள்போலக் கத்துகின்றோம். எப்பொழுது யாம் ஒரு கக்ஷியாய்ச் சேர்கின்றோமோ, அப்பொழுதே யாம் ஸமத்துவத்தை ஆக்ஷேபிக்கின்றவர்களாகின்றோம். ஆகவே சமத்துவமென்பது இல்பொருளாய் விடுகின்றது. மகம்மதியர்கள் சர்வ சகோதரத்தன்மையைப் பற்றிப் பேசுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் பேச்சின் பிரயோஜனமென்னை? மகம்மதியர்களைத் தவிர்த்து மற்றெவர்களையும் அவர்கள் தம் சகோதரர் குழாத்தில் சேர்க்கமாட்டார்கள். அத்தகையாரது கழுத்தை வெட்டி விடுவார்கள் கிறிஸ்தவர்களும் சர்வ சகோதரத்தன்மையைப்பற்றி பேசுகின்றார்கள். ஆனால் யாவனொருவன் கிறிஸ்தவனல்லனோ அவன் * அந்த ஸ்தானஞ்சென்று நித்தியகாலமும் வேதனை யனுபவிக்கவேண்டும்.

• சர்வ சகோதரத்துவம், சர்வ சமத்துவம், அர்த்தம், மனோதர்மம்முதலியவற்றில் சமத்துவம் - என்னு மிவைகளைப்பற்றி யாம் ஆராயுங்கால், இவ்வாறாகத்தான் யாம் இவ்வுலகில் செல்லவேண்டியிருக்கின்றது. ஆகையால் இவ்வுலகச் சர்வ சமத்துவ விஷயத்தைப்பற்றி மேற்சொல்லியவாறு யாவரேனும் கூறுவாராயின், நீங்கள் சிறிது ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் இத்தகைய வேஷம் போடுகிறவர்கள் பெரும்பாலும் சுயகாரிய துரந்தரர்களாய் இருப்பர். "கார்காலத்தில் சில சமயங்களில் விண் முகில் வருகின்றது; அது பலமுறையும் வாளா உருமுகின்றதேயன்றி, மழை பெய்கிறதில்லை. ஆயின்மாரி காலத்தில் மேகங்கள் கர்ஜனை செய்வதில்லை, ஆனால் உலகத்தை ஜலப்பிரளயத்தில் அமிழ்த்திவிடுகின்றன" அவ்வாறு உண்மையாகவே பாடுபடுகின்றவர்களும், மனிதர்களனைவரும் ஏக குடும்பத்துச் சகோதரர்களென இருதயத்திற்

* நித்திய நரகம். இது பயங்கரஸ்தான மாகையால், இதனைப் பெயரிட்டுக் கூறுது நிர்த்தேச மாத்திரத்தாற் கூறுவது கிறிஸ்துவர் வழக்கு.

கருதுகின்றவர்களும் மிகுதியாய்ப் பேசுவதில்லை; சர்வ சகோதரத்துவத்தின் பொருட்டு சிறு சங்கங்கள் சேர்ப்பதில்லை. ஆயின் அவர்களது செய்கைகளும் அவர்களது முழு சரீரமும், அவர்களது மாதிரியும், அவர்களது அசைவும், அவர்களது நடையும் அன்னமும் பானமும், அவர்களது முழுவாழ்க்கையும் அவர்கள் உண்மையில் சர்வ மாநுட சகோதரத்துவ உணர்ச்சியுள்ளவர்களென்றும் அவர்கள் அனைவரிடத்திலும் அன்பும் அநுதாபமும் உள்ளவர்களென்றும் பறைசாற்றுகின்றன. அவர்கள் வாசா கைங்கரியம் செய்யார்கள். மற்று செய்து நடத்திக் காட்டுவார்கள். நமக்கு உண்மையான உழைப்பின் ஆதிக்கமும் பேச்சின் குறைவும் வேண்டியிருக்கின்றன.

இதுகாறும் செய்த ஆராய்ச்சியினால், மத விஷயத்தில் யாதொரு பொதுமையான அம்சமும் காண்பதரிதென வேற்பட்டது; ஆயினும் அத்தகைய அம்சங்கள் இருக்கின்றனவென யாம் அறிவோம். யாம் அனைவரும் மனிதர் தாமே? ஆனால் எல்லோரும் சமமாயிருக்கின்றோமா? இல்லவே இல்லை யாம் சமமாயிருக்கின்றோமென யாவன் கூறத்துணிவன்? அங்ஙனங் கூறுவோன் உன்மத்தனன்றே. அன்னோன் ஒருவனே யாமனைவரும் சமானரெனப் பகர்வான். எமது புத்தியிலும், எமது சத்திகளிலும், எமது சரீரங்களிலும் யாம் அனைவரும் சமானமா யிருக்கின்றோமா? ஒருவன் மற்றவனைவிட பலசாலியாயிருக்கிறான்; ஒருமனிதன் வேறொருவனிலும் அதிக புத்தி கூர்மையுள்ளவனாயிருக்கின்றான். யாமனைவரும் சமானராயிருந்துழி இவ் அசமத்துவம் ஏனிருக்கவேண்டும்? அதனை யார் உண்டுபண்ணியது? நாமா? எமக்கு சத்தியும் புத்தியும் தேகவலிமையும் நிறைந்தேனும் குறைந்தேனும் இருக்கின்றமையின் அவை எம்முள் ஒருவருக்கும் மற்றவருக்கும் வேற்றுமையை அவசியம் உண்டாக்கவே செய்யும். ஆயினும் சமத்துவம் என்னுங் கொள்கை சரியானதென்று எம்மனதிற் படுவதாக எம்முள் ஒவ்வொருவரும் அறிகின்றோம். இதனை வேறோர் உதாரண முகத்தான் ஆராய்வாம். ஈண்டுள்ள யாமனைவரும் மனிதர்களே யாயினும், சிலர் புருஷராயும் சிலர் ஸ்திரீகளாயும் இருக்கின்றோம்; இவ்வயினிற்பவர் கருமை நிறத்தவர். அவ்வயினுள்ளவர்வெண்மை நிறத்தவர். ஆனால் எல்லோரும் மனிதர்களே யாவர்; ஒரே மாநுடவர்க்கத்திற் சேர்ந்தவர்களே யாவர். எமது முகங்கள் பலவகைப்பட்டிருக்கின்றன. இங்குள்ளவர்களுள் எவ்விருவரது முகமும் ஒரே மாதிரியாயில்லை. ஆயினும் நாமெல்லோரும் மனிதர்களே யாவேம். இவ் ஏகமான மாநுடத்தன்மையென்பது யாண்டுளது? என் கட்புலனுக்கு அது விஷயமாகவில்லையே அதனை யான் இன்னதென்று பிரித்துப்பார்க்க முயலுங்கால் அஃதிருக்குமிடம் எனக்குப் புலப்படவில்லையே. ஒரு புருஷனையேனும் ஸ்திரீயையேனும் கருமையாகவேனும் அழகாகவேனும் காண்கின்றேனே யன்றி இத்துணை முகங்களுக்குள்ளும் பொதுவாயிருப்பதான அம்மாநுடத் தன்மையெனும் சமஷ்டி குணவிசேஷத்தைப் பரிசிக்கவும் உணரவும் அநுபவிக்கவும்

அதனைப்பற்றி நினைக்கவும் நான் முயலுங்கால் எனக்கஃது அகப்படுகின்றதில்லையே. அஃது இந்திரியங்களுக் கப்பாலுள்ளதும் கருத்துக்கப்பாலுள்ளதும் மனத்தினுக்கப்பா லுள்ளதுமாம். ஆயினும் அஃது இங்கேயிருக்கின்றதென் றெனக்கு உறுதியாய்த்தெரியும். எனக்கு இங்குள்ள எதைப்பற்றியேனும் அதிகமான நிச்சயமுண்டெனில் அது நம்மெல்லோருக்கும் பொதுவாயுள்ள இம்மானுடத் தன்மையேயாம். யான் அதனைப் பிரத்தியக்ஷமாயும் தெளிவாயுங் காணமுடியாது. இம்மானுடத் தன்மையென்பது கடவுளின் ஓர் ஆவிர்ப்பாவமேயாம். "அவனிடத்தே எமது வாழ்க்கையும் அசைவும் இருப்புமாம்" அவனிடத்தும் அவன் மூலமாயுமன்றே யாம் உள்ளவராகின்றோம். இந்தப் பொதுமையாக்கப்பட்ட தத்துவத்தின் வாயிலானன்றே யான் நுங்களைப் புருடனாகவேனும் ஸ்திரீயாகவேனும் காண்பது; ஆயினும் யான் அதைப்பிடித்து இன்னதென்று விளக்கப்புகுங்கால், அஃதியாண்டு மிலதாகின்றது. எனெனில் அஃது இந்திரியங்களுக் கப்பாலுள்ளது. ஆயினும் அதன்கண்ணும் அதன் வாயிலாயுமன்றே பொருள்கள் அனைத்தும் இருப்பனவாகின்றனவென்றுயாம் அறிவோம் இவ்வாறன்றே ஸர்வஜன ஐக்யமென்பதும், அநுதாபமென்பதும், உலகின்கணுள்ள பலவகைப்பட்ட மதங்களனைத்தினூடும் கடவுள் வடிவமாய் ஓடி நின்றிலங்கும் இச்சர்வார்ஹ மதமென்பதும். அது முக்காலத்தும் உண்மையாயுள்ளதென்க. "மயி ஸர்வம் இதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" "இம்மணிகளினூடே செல்லுஞ் சூத்திரம் யான்" ஒவ்வொரு மணியும் ஒருமதம் அல்லது அதன் உட்பிரிவாம். மணிகள் பலவகைப்பட்டனபோல மதங்களும் பல்வகையனவாம். பகவான் அவையனைத்தினூடும் செல்லும் நூலாயிருக்கின்றார். மனிதருள் பெரும்பான்மையோர் அதனை யறியாதிருந்தும் அவர்கள் அனைவரும் பகவானிடத்தும் பகவான்மூலமாயும்தொழிற்புரிபவர்களாயிருக்கின்றனர். அவர்கள் ஒரு நிமிஷநேரமேனும் அவனுக்குப் புறம்பேயிருத்தல் முடியாது; எனெனில் எல்லாவிதத்தொழிலும் அவன் மூலமாயும் அவனிடத்துமே சாத்தியமென்க. அவனையாம் இனைய னென்றும் வரையறுத்து கூறுதல் முடியாது. அவன் கடவுளேயாம்.

வேற்றுமையின்கண் ஒற்றுமையேபிரபஞ்சவமைப்பின் ஒழுங்காய்ப் போந்துளது. யாமனைவரும்மனிதர்களேயாயினும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கின்றோம். மானுடவர்க்கத்தில் சேர்ந்தவர்களெனக் கருதுங்கால் நீவிரும் யானும் ஒருபாற்படுகின்றோம். ம-ா-ா-ஸ்ரீ இன்னார் என விவகரிக்கையில் நம்மிடமிருந்தும் யான் வேறாகின்றேன். பாலைநோக்குங்கால் ஆண்பெண் என்ற வேற்றுமை நிகழ்கின்றது. இருபாலாருக்கும் பொதுமையான மானுட சாதியில் இருவருஞ் சமமாகின்றார்கள். மனிதர்களாகிய நீவிர் ஜந்துவினின்றும் வேறாயினும் பிராணிசோடிகளென்ற விவகாரத்தில் ஆண் பெண் ஜந்து செடிமுதலிய யாவும் ஒன்றுபடுகின்றன. ஸத்தாமாத்திரமாய்க் கருதுங்கால் அகிலபிரபஞ்சமும் நீவிரும் ஒன்றாகின்றீர்கள். இப்பிரபஞ்சத்தில் எஞ்சி

விற்கும் தனிப் பரம்பொருளாகிய கடவுளே அந்த சமஷ்டி ஸத்தையாம். அப்பரம்பொருளி னிடத்தில் யாமெல்லாம் ஒன்றுபடுகின்றோம். ஆனால் சிருட்டியில் இவ்வெல்லா வேற்றுமைகளும் அவசியமாய் ஏற்பட்டு என்றும் உள்ளனவாகின்றன. எமது செயல்களிலும் யாம்வெளிப்படுத்தும் சத்திவிசேடங்களிலும் இத்தகைய வேற்றுமைகள் எக்காலும் இருக்கவேசெய்யும் ஆகவே ஸர்வார்ஹமதமென்பதனால் எல்லாமாந்தர்களும் ஒரேவிதமானமதக் கொள்கைகளை நம்பவேண்டுமெனில் அதுமுடியாத காரியமாம். அஃது ஒருகாலும் ஆகாது. எல்லாமுகங்களும் ஒரே தன்மையாயிருக்குங்காலம் என்றுமில்லை.

இனி ஒருதன்மையான புராணசித்தாந்தமே அனைவரும் பொதுவாய் ஏற்றுக்கொள்வார்களெனக் கருதுவதும் அசாத்தியம். அஃதெக்காலத்தும் நடவாது. அன்றி அனைவர்க்கும் பொதுவான கர்மகாண்டமும் ஏற்படுத்தமுடியாது. அத்தகையநிலைமை ஒருகாலும் உள்ளதாகாது. அவ்வாறு எப்பொழுதேனும் நிகழுமாயின் உலகமே அழிந்துபோய்விடும். ஏனெனில் வேற்றுமையன்றே உயிர்வாழ்க்கையின் பிரதமதத்துவம். யாம் எல்லாம் வியஷ்டி வியக்திகளாயிருப்பது எதனால்? வேற்றுமையானன்றே? ஏறக்குறைவின்றி தராசில் நிறுத்ததுபோல் நேர்நிறையாயிருத்தல் எமது அழிவினுக்கே ஏதுவாய் முடியும். இதற்கு நிதர்சனமாக இவ்வறையிலுள்ள உஷ்ணத்தை யுற்று நோக்குவாம். இஃதெப்பொழுதும் எங்கும் சமமாய்ப்பரவி ஒரே நிலைமையிலிருக்க முயல்கின்றது. அஃது அத்தகைய நிலைமையை யடையுமேல் அவ்வுஷ்ணம் நமது விவகாரங்களுக்கு இல்லாததற்குச் சமானமேயாம். இப்பிரபஞ்சத்திற் பொருட்களின் சலனம் எதனால் உண்டாகின்றது? நிறையில்லாமையாலன்றி வேறென்ன? அனைத்தும் ஒரேதன்மையா யிருத்தலாகிய ஐக்கியமெனும் நிலைமை இவ்வுலகம் அழியுங்காலையிற்றான் உண்டாகும். இல்லாவிடின் அஃதசாத்தியமே அதுமாத்திரமேயன்றி அவ்வித நிலைமையுளதாவதும் அபாயகரமாம். யாமனைவரும் ஒரேவிதமாகவே சிந்திக்கவேண்டுமென யாம் ஒருகாலத்தும் விரும்பலாகாது. அங்ஙனம் விரும்புமிடத்து ஒவ்வொருவர் சிந்திப்பதற்கும் யாதொரு சிந்தனையும் இல்லாதுபோம். பொருட்காட்சி சாலையில் வைத்திருக்கும் எகிப்திய மம்மிகளைப்போல் யாம் அனைவரும் ஒரே மாதிரியாய்க் கருதுவதற்கு யாதொருகருத்துமின்றி ஒருவரையொருவர் பார்த்துக்கொண் டிருக்கவேண்டிவரும். ஆகையால் இந்தவேற்றுமையே, இந்த வியஷ்டிபாவமே, எமக்குள்ள இந்நிறையில்லாமையே நமது விருத்திக்கும் கருத்துக்கும் முக்கியகாரணமாய் நிற்பதாம். இவ்வாறுதான் எக்காலமும் இருத்தல்வேண்டும்.

ஆகவே சர்வார்ஹ மதலக்ஷண பூர்த்தி யென்பது யாது? என்று வினவுங்கால் அஃதொரு பொதுமையான தத்துவசித்தாந்தமுமன்று, அல்லது பொது

மையான வொரு புராண சித்தாந்தமுமன்று, அன்றி யனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பொதுமையானதொரு கர்மகாண்டமுமன்று. மற்றென்னையெனின் சக்கரத்திற்குட் சக்கிரமமைந்துள்ள மகா சூக்ஷுமமும் விசித்திரமும் ஆச்சரியகரமுமான மகாயந்திரமெனத்தகும் இப்பிரபஞ்சம் இவ்வண்ணமே தான் சுழன்று கொண்டிருத்தல் வேண்டும். ஆயின் நாம் என்ன செய்யக்கூடுமெனில் யாம் அவ்வியந்திரத்தின் சக்கரங்களுக்கு ஒருவாறு எண்ணெய்பூசி அதை மென்மையாய் ஓடச்செய்து அதன் வேகத்தையும் வன்மையையுஞ்சிறிது தணிக்கலாம். அஃதெவ்வாறெனின், வேற்றுமை யென்பது இயல்பிலேயே இன்றியமையாத தென்பதை வுணர்வதாலென்க. ஒரே உண்மையைப் பலவகையானும் விளக்கலாம் என்பதையும் அவ்வகைகளில் ஒவ்வொன்றும் அதுநெல்லுங்காறும் உண்மையே யென்பதையும் யாம் அறிதல் வேண்டும். இதனை சூரியனை யுதாரணமாகக்கொண்டு விளக்குவாம். பூமியின் மீது நிற்குமொருவன் சூரியன் காலையில் உதயமாகும் பொழுது பார்க்கிறதாக வைத்துக்கொள்வோம். அவன் முதலிற் பெரியதோர் உண்டை வடிவத்தைக் காண்கின்றான். அவன் சூரியனைநோக்கிப் பிரயாணஞ்செய்ய விருப்பங்கொண்டு, தன்பிரயாண மார்க்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் புகைப்படம் எடுப்பான் வேண்டிய யந்திரத்துடன் புறப்பட்டு மேற்சென்று புகைப்பட மெடுக்கிறான். அவன் ஒவ்வொரு ஆயிர மயிலுக்கும் ஒரு புதிய புகைப்படம் எடுத்துக்கொண்டு சூரியனைப்போய் சேருகிறவரையிலும் அவ்வாறே செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்கப்பட்ட புகைப்படம்மற்றகட்டங்களில் எடுத்தவற்றினும் வேறுபாடுடையதாய்த் தோன்றும். அவன் திரும்பி வருகையில் அவன் எடுத்துக்கொண்டு வந்த பல்லாயிரம் புகைப்படங்களையும் பார்த்தால் அத்துணையாயிரம் சூரியர்களின் படங்கள் தாமோ இவை யெனத்தோன்றும் ஆனால் அவன் ஒரே சூரியனைத்தான் தன் பிரயாணத்தின் வெவ்வேறு கட்டங்களிலும் புகையிற் பிடித்தானென்றெமக்குத் தெரியும். அவ்வாறே கடவுள் விஷயமுமென்க. பெருமையாகவோ சிறுமையாகவோ, உயர்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ, தாழ்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ உத்தம சம்பிரதாய விதிகளின் படியோ அதம சம்பிரதாய விதிகளின் படியோ, மிகச்சிறந்த புராணசித்தாந்தத்தின் வழியாகவோ மிகப்புன்மையான கற்பனைப் பிரபந்தங்களின் வழியாகவோ, மிக்கசாத்துவிகம் பொருந்திய கர்மங்களின் மூலமாகவோ, அதிதாமசமான புற்புடாதிகளின் ஆராதனை மூலமாகவோ, பிரதிமதமும், பிரதி ஆன்மாவும், பிரதி ஜாதியும், பிரதிசமயமும், அறிந்தோ அறியாமலோ, மேனோக்கிக் கடவுள் முகமாய்ச் செல்லாநிற்கின்றன. மனிதனுக்குண்டாகும் ஒவ்வொரு சத்திய தரிசனமும் ஈசுவர தரிசனமன்றி மற்றேதுமன்று. நாம் ஒவ்வொருவருங் கையில் ஒருபாத்திரம் எடுத்துக்கொண்டு ஏரியினின்று அதில் தண்ணீர் கொண்டுவருவதாகவைத்துக்கொள்வோம். ஒருவன் கிண்ணமும் ஒருவன்குடமும் மற்றொருவன் அதை

விடப் பெரிய வொருகுடமும் இவ்வாறாக எடுத்துக்கொண்டு அவற்றைத் தண்ணீரால் நிறைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பாத்திரங்களை யெடுத்துச் சோதிக்குங்கால், அந்தந்தப்பாத்திரத்திலுள்ள ஜலம் அதன் அளவுக்குத்தக்க வாறேயென்றேற்படும். கிண்ணத்தைக்கொண்டுவந்தவனிடம் கிண்ணத்தளவு ஜலமும், குடங்கொணர்ந்தவனிடம் குடத்தினளவு ஜலமுமே இருக்கக்காண்போம். ஆனால் ஒவ்வொரு பாத்திரத்திலும் இருப்பது தண்ணீரன்றி மற்றெதுவு மில்லையன்றோ? அவ்வாறே மதவிஷயத்திலும். நமது மதங்கள் இத்தகைய சிறுபாத்திரங்களைப்போ லிருக்கின்றன. நம்முள் ஒவ்வொருவரும் ஈசுவராநுபூதியை யடைய முயல்கின்றோம். இப்பலவகைப்பட்ட பாத்திரங்களில் நிறைந்துள்ள ஜலத்தைப்போன்றவர் ஈசுவரன். ஒவ்வொரு பாத்திரத்திலும் உண்டாகும் ஈசுவர தரிசனம் அப்பாத்திரத்தின் அளவினதேயாகும். அவ்வாறாயினும் ஈசுவரன்மாத்திரம் ஒருவரே. இக்காணப்பட்ட தரிசனங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளவர் அவ் ஈசுவரனே. நமக்குக் கிடைக்கக்கூடிய சமரஸத்தன்மையைப்பற்றிய அறிவு இவ்வொன்றேயாம்.

உபதேச முகத்தாற் கூறும்வரையிலும் இதுகாறுஞ் சொல்லிவந்தது சரியே; ஆனால் இச்சமயசமரஸத்தை அனுஷ்டானத்திற் சாதிப்பதற்கு மார்க்கம் ஏதேனுமுளதோ? மதத்தைப்பற்றிய பலவகைக் கொள்கைகளும் உண்மையே என்னும் இவ்வங்கிகார உணர்வு தொன்றுதொட்டு உண்டாயிருக்கின்றது. பரதகண்டத்திலும், 1 ஆர்க்ஷேந்திரபுரியிலும், 2 தேஜோத்வீபத்திலும், சீனநாட்டிலும், 3 சுபர்ணத்தீவிலும், 4 திரிவிஷ்டபத்திலும் சமீபத்தில் 5 அமரகநாட்டிலும் - இவ்வாறு பற்பலதேயங்களினும் சர்வசமயங்களையும் அன்பிலே ஒன்றுசேர்க்கத்தக்க ஒருசமய சமரஸ சம்பிரதாயத்தை ஸ்தாபிக்கப் பன்னூறு பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. அவைகள்காரியத்தை சாதிக்கும்படியான மார்க்கமொன்றினையும் அவலம்பிக்காமையால் அவையாவும் தவறிவிட்டன. உலகத்தின்கண்ணுள்ள சர்வமதங்களும் சரியென அநேகர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆனால் இம்மதங்களெல்லாம் ஒன்றுபடும்பொழுது ஒவ்வொருமதமும் தன்சிறப்பான அம்சத்துடன் விளங்கத்தக்க மார்க்கத்தை அவர்கள் கைக்கொள்கின்றனரில்லை. ஒருமனிதன் தன் மதத்தின்கண்ணுள்ள விசேஷத்தன்மையை இழக்காது மற்றமதங்களுடன் ஐக்கியப்படக்கூடிய அம்சத்தைக் காட்டத்தக்க மார்க்கமே சாத்தியமானது. ஆனால் இதுவரையில் சமரஸத்தை நிலைகாட்ட ஏற்பட்டமார்க்கங்கள் எல்லாமதக் கொள்கைகளையும் சுவீகரிக்க வேண்டுமெனச் செப்பினவேயன்றிக் காரியத்தளவில் நோக்குங்கால், தாமும் அவற்றையெல்லாம் சிலகட்டுதிட்டமான சம்பிரதாயங்களுக்கு பத்தப்படுத்தி, அக்காரணத்தினாலேயே முன்னிலும் அதிகமான உட்பிரிவுகளையும் ஒன்றற்கொன்று சண்டைசச்சரவு மனவருத்தங்களையும் உண்டுபண்ணின.

1 அலெக்ஸாந்திரியா 2 யூரோப் 3 ஜப்பான் 4 திபெட் 5 அமெரிகா.

இவ்விஷயமாய் யானும் ஒரு சிறியமார்க்கத்தை யோசித்துவைத்திருக்கிறேன். அது காரியாம்சத்துட் பயன்படுமோபடாதோ அறியேன் நுங்களுக்கு அதனைக் கூறுகின்றேன் அதை நீவிர் தர்க்கித்துத் தெளியலாம். எனது மார்க்கமாவது என்னையெனின், முதன்முதல் 'இருப்பதை யழிக்கேல்' என்னும் மூதுரையை ஞாபகத்தில் வைக்கும்படியான மன்பதையை வேண்டுவேன். எதையும்தகர்த்தெறியும் சீர்திருத்தக் காரர்கள் உலகத்துக்கு யாதொருநன்மையுஞ் செய்வதில்லை ஆகவே எதனையும் உடைக்கேல், தரைமட்டும் ஆக்கேல், ஆனால் நிர்மாணம் செய்ம்மின். நுங்களாற் கூடுமாயின் உதவிபுரிமின்; இல்லாக்கால், கைபொத்தியருகேநின்று காரியம்நடந்தேறுவதைப் பார்மின்; உங்களால் உதவிபுரியக் கூடாமையாயின் துன்பஞ்செய்யாமலிருங்கள் எம் மனிதனது அந்தரங்கமான கொள்கைகளைப் பற்றியும் அவை உள்ளன்புடன் கூடியிருக்கும் வரையிலும் வசைமொழிவழங்கேல். இரண்டாவது, மனிதன் உள்ளநிலையை உணர்ந்து அந்நிலையினின்றும் அவனையுயர எழுப்பவேண்டும். மதங்களெனும் வட்டத்திற்கு கடவுள்நடுமையமென்பதும் நம்முள் ஒவ்வொருவரும் அம்மையத்தினின்று வட்டத்தின் சுற்றுக்கோட்டிற் செல்லும் நேர்க்கோட்டின் வழியால் அக்கடவுளைநோக்கிச் செல்கின்றோமென்பதும் சரியாயின், யாமனைவரும் அம்மையத்தை யவசியம்போய்ச் சேர்வோம் என்பது வலியுறுகின்றது. மையத்தினின்று வட்டச்சுற்றுக்கோட்டுக்குப் பாயும் எல்லா நேர்க்கோடுளும் சந்திக்கும் அம்மையத்தின் கண்ணே எமது வேற்றுமைகள் யாவும் நீங்கும், ஆனால் அவ்விடம்வந்து சேரும்வரையில் வேற்றுமையானது அவசியம்இருக்கவேசெய்யும்.இம்மையத்தினின்றுசெல்லும் நேர்க்கோடுகளெல்லாம் அம்மையத்தின் கண்ணேவந்து சேர்கின்றன. நம்முள் ஒருவர் தம் இயல்பிற்கிணங்க இக்கோடுகளுள் ஒன்றன்வழியாயக் செல்கிறார். மற்றொருவர் மற்றொருகோட்டின் வழியாய்ச் செல்கிறார். யாம் முதற்கண் துவக்கிய கோட்டின்வழியே செல்வேமாயின் இறுதியில் மையத்துக்குவந்துசேர்வது திண்ணம். ஏனெனில் "சர்வமார்க்கங்களும் உரோமபுரியை நோக்கியன்றே செல்கின்றன" நம்முள் ஒவ்வொருவரும் நமக்குள்ள வியல்பினுக்கிணங்க அபிவிர்த்தியடைந்து வருகின்றோம். ஒவ்வொருவரும் காலக்கிரமத்தில் உயர்ந்த உண்மையை அறிவோம், ஏனெனிற் சர்வமானவர்களும் இறுதியில் தமக்குத் தாமாயன்றே உபதேசகர்களாய் அமையவேண்டும், நுங்களாலாதல் என்னாலாதல் யாது முடியும்? ஒரு குழவிக்கேனும் உபதேசிக்க நுங்களா லாகுமெனக்கருதுகின்றீர்களா! ஒருகாலத்து முங்களாலாகாது. குழவி தனக்குத்தானே கற்றுக்கொள்கின்றது. அதற்கு வேண்டிய சவுகரியங்களை யமைத்தலும் இடையூறுகளை நீக்குதலும் நுங்கள் கடமையாகும். ஒரு செடிவளர்கின்றது. அதை வளரச்செய்வது நீவிரா? அதைச்சுற்றிலும் வேலியமைத்து செடியை யாதொரு ஜந்துவும் மேயாமலிருக்கப் பார்த்துக்கொள்வதே நுங்கள்கடமையாகும். அதனுடன் நுங்கள்கடமை முடிகின்றது. இனி அச்செடிதானே வளரு

வேண்டியது. அவ்வாறுதான்பிரதிமனிதனுடைய ஆத்மோந்நதியும். நுங்களுக்கு கற்பிக்கயாவராலும் ஆகாது நும்மை .ஆத்மகாமனுகச்செய்ய எவராலும் ஆகாது நுமக்கு நீவிரே ஆசாரியனுதல் வேண்டும். நுங்கள்உந்நதி அந்தர்முகமாகவே சாதிக்கப்படுதல் வேண்டும்.

எம். குப்புசாமி ஐயர்.

---

## CORRESPONDENCE.

## கடிதம்.

---

### I.

### திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் மகாகனம் பொருந்திய எட்வேட் சக்கிரவர்த்தி யவர்களின் முடிசூட்டுக் கொண்டாட்டம்.

இந்த ஜனவரிமீ 1வ வியாழக்கிழமை முற்பகல் சுப்பிரமணிய ஆலயத்திலிருந்து யானையின்மீது வைத்துச் சிறப்பித்துக்கொண்டு வரப்பட்ட ஷை சக்கரவர்த்தியவர்கள் படத்தை ஷை வித்தியாசாலையின் முன்னர் ஷை கொண்டாட்டத்துக்காக மிக அலங்காரமாக அமைக்கப்பட்ட பந்தரின் முன் நிறுத்திப் பூமாலை சூட்டிச்சிறப்புச் செய்தபின் கூடவந்த உத்தியோகத்தர் பிரபுக்கள் முதலாயினோர்கள் சந்தனஞ் சர்க்கரை தாம்பூல முதலியன கொடுத்து உபசரிக்கப்பட்டார்கள். அதன்பின் ஷை வித்தியாசாலைக்கு அதிபதியாகிய ஸ்ரீமத் சி. த. சுவாமிநாத பண்டிதரவர்கள் தாம் சக்கரவர்த்தியவர்கண்மேற் பாடிய பாட்டுக்களை வாசித்துப் பொருள்சொல்லி யாவரையும் மகிழ்வித்தார்கள். அன்று பிற்பகல் சக்கரவர்த்தியவர்கள் க்ஷேமத்தைக்கருதி ஏழைகள் யாவருக்கும் அன்னதானஞ் செய்யப்பட்டது.

இரண்டாநாள் ஷை பண்டிதரவர்கள் சக்கரவர்த்தி யவர்களின் செங்கோன்மைச் சிறப்பை மிக விரித்துக்கேட்டோர் மனம் கசிந்துருகும் வண்ணம் பிரசங்கஞ் செய்தார்கள். சக்கரவர்த்தியவர்கள் முடிசூட்டுக் கொண்டாட்டத்தின் பொருட்டு உத்தியோகஸ்தரால் மிகநெருக்கிப் பொருள் வாங்கப்பட்டு வருத்தமடைந்து கொண்டிருந்தவர்களும் அப்பிரசங்கத்தைக்கேட்டு வருத்தம் நீங்கி மகிழ்ச்சியடைந்தார்கள்.

மூன்றுநாள் சுப்பிரமணிய சுவாமிக்கு அபிடேக முதலியன செய்வித்துப் பிரசாதம் ஷை வித்தியாசாலைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டது. ஷை கொண்டாட்டத்துக்காக வேண்டிய செலவு வித்தியாசாலையின் பொறுப்பாகவே நடத்தப்பட்டது.

சக்கிரவர்த்தியவர்கண்மேற் பண்டிதரவர்கள் பாடிய பாட்டுக்கள் வருமாறு :—

### வெண்பா.

மேவு சுபகிருது விற்றிங்கட் பொன்வாரந்
தாவிறு வோணந் தயங்கிடுமே—காவலத்திற்
சீதர னேருந் திருவாய்ந்த வெட்வேட்டு
நாதன் முடிசூடு நாள்.

### கட்டளைக் கலித்துறை.

சீர்த்திக்கு விண்ணீ மநுநீத கண்ட திறன்மகிபன்
போர்த்திக் குவலயத் திற்பிற வாவகை பேணிமுறை
யார்த்திக் குளமகி ழெட்வேட் டரசனை யாரறிஞ
ரேர்த்திக்குப் பாலகர் போலெதா மைக் னகாத்னெல்வியப்பே.

பறங்கி மகிபரும் பாவித் துலுக்கரும் பண்டுசெய்த
மறங்களை மாற்றிநம் மார்க்கங்க டந்து மநுநெறிசெய்
தறங்கிள ரெட்வேட் டரசனை யாங்க ளனுதினமுந்
திறங்கிளர் தெய்வத மேற்றுக்கொண் டோமினித் தீங்கிலையே.

எற்றோ நமரங்காள் வாழ்வு மதமு மெழினுமெலா
மற்றோ ரரசன் வரிலெட்வேட் டிங்கென்றும் வாழ்ந்திடவே
பற்றோர் வழுத்துந் திருச்செந்திற் பண்ணவன் பாதமல
ருற்றோர் வரந்தா வெனவிரப் பேமிங்க னுற்றிடுமே.

வாழிய வெட்வெட்டு மன்னவன் செங்கோல் வழங்குருளும்
வாழிய வைதிக சைவநன் மார்க்கம் வளம்பெருக
வாழிய கண்டிவெண் ணீறுபஞ் சாக்கர மாதவத்தோர்
வாழிய வந்தணர் வானவ ரானினம் வாரியுமே.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்துவ சிரோமணி ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர்கள் சுப்பிரமணிய வித்தியாசாலையைக் குறித்துப்பாடிய பாட்டுக்கள் வருமாறு :—

### வெண்பா.

வாய்ந்த சுபகிருது வற்சரத்தி லைப்பசியேழ்
போந்தகுரு வாரம் புனர்பூசஞ்—சேந்தனெழிற்
பாதமுன்னிச் செந்தூரிற் பண்டித ஞஞ்சுவாமி
நாதன்கல் லூரிகொண்ட நாள்.

### கட்டளைக் கலித்துறை.

வாழிய வந்தணர் மன்னவ ரானின மாமுகில்கள்
வாழிய செந்தமிழ் லசைவநன் மார்க்கம் வளர்க்குமன்பர்

வாழிய சிரலை வாய்முரு கேசன் வழங்குமருள்
வாழிய சுப்பிர மண்ய விதாலய மாநிலத்தே.

சுந்தரதேசிகர்.

II.

திருக்கோவையா ருண்மை விளக்கத்துப்
பிழைதிருத்தம்.

ஞானபோதினிப்பத்திரிகையின் ஐந்தாவது சம்புடத்துப் பதினொராம் புஸ்தகத்து 420-ம் பக்கத்தில் 23-ம் 24-ம் வரிகளில் "நாயகனென்பது மாந்திரப்படுகின்றதன்றி" என்பதை "நாயகனென்று பெறப்படுவதோடு' எனவும், 25-ம் வரியில் "கொள்ளப்பட்டிலர்" என்பதை "கொள்ளப்பட்டார்' எனவும், 27-ம் வரியில் "கைவளை பணைமுலை" என்பவற்றைச் "சேலென கண்கள், என்னணியர்முலை" எனவும், 27-ம் 28-ம் வரிகளில் "அத்துணுக்கை வாக்கியங்களிலே இல்லையாமென்றும் அறிக" என்பதை "ஆண்டுவாம் என்றும் அறிக" எனவும், 29 ம் வரியில் பேசப்படாத விடத்து" என்பதை "பேசப்பட்டவிடத்து" எனவும், 30-ம் வரியில் "சொல்லப்படவில்லை என்று அதனால்" என்பதை "சொல்லப்படினும்" எனவும், 430-ம் பக்கத்து 1-ம் வரியில் "பரும்பொருள்" என்பதை, "பரமபொருள்" எனவும் "பேசப்பட்ட" என்பதை பேசப்பட" எனவும், 10-ம் வரியில் "மொன்றிமறியா" என்பதை "மொன்றுமறியா" எனவும். 431-ம் பக்கத்து 21-ம் வரியில் "அக" என்பதை "அகப்" எனவும், 22-ம் வரியில் "பாடிற்றில ரான்கலி" என்பதை "பாடிற்றில ராகலின்" எனவும், 432-ம் பக்கத்து 2-ம்வரியில் "நாடகத்" என்பதை "நாடக" எனவும் 29-ம் வரியில் "பிராமத்தை என்பதை "பிரமத்தை எனவும், 30-ம் வரியில் "கய்ளுடையா பசுபத" என்பதை "களுடைய பாசுபத" எனவும், 32-ம் வரியில் "நாமகி" என்பதை "நாயகி', எனவும், 433 ம் பக்கத்து 21-ம் வரியில் "பூட்டிஞய்" என்பதை "பூட்டிஞப் எனவும் 335-ம் பக்கத்து 13-வரியில் "வெழுக்கம்" என்பதை "வொழுக்கம்" எனவும் 4-ம்வரியில் "பேலும்" என்பதை "போலும் எனவும், ஐந்தாவது சம்புடத்து 12-வது புஸ்தகத்து 455-ம் பக்கத்து 7-ம் வரியில் "பொருளே"என்பதைப் "பொருளை" எனவும் 32-ம்வரியில் "சிவத்தையும்" என்பதை "சிவமும்" எனவும், 458-ம் பக்கத்துஇறுதிவரியில் "நயகனுகிய" என்பதை "நாயனுகிய" எனவும் திருத்தி வாசிக்க.

ஸ்ரீகாசிவாசி. செந்திநாதையர்.

# REVIEWS BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

கீதாமிர்த மஞ்சரி :—

[இஃது எட்டயபுரம் சமஸ்தானத்து ஆதீன கர்த்தரவர்களாகிய மகா ராஜ ராஜ பூஜித மகாராஜ ராஜ ஸ்ரீ ராஜ ஜகத்வீர ராம வேங்கடேசுர எட்டப்ப மகாராஜ ஐயனவர்கள் உத்தரவின்படி ஷை சமஸ்தானத்து இளசை வித்யா விலாசினி யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை நூற்புறத் தெங்குங் குறிக்கப்படவில்லை.]

இதனை ஆக்கியோர் நம் நண்பராகிய விருதைச் சிவஞானயோகிக ளென் பார். இந்நூல் எட்டயபுரம் சமஸ்தானத்துச் சங்கீத சாகித்ய வித்துவான் சுப்பராம தீக்ஷித ரவர்களால் பரிசோதிக்கப்பட்டது. இனிமையான பாடல் களுங் கீர்த்தனங்களும் ஸ்வர அமைப்புக்களுடன் கொண்டு விளங்குகின்றது. இஃதோ ரிசைத்தமிழ் இலக்கிய நூல் என்னலாம். நல்ல நடையில் அமைந் துளது. நன்றாய் அச்சிடப்பட்டுளது. இதனை யாவரும் வாங்கிப் படிப்பார்க ளாக.

ஜானகி பரிணய நாடகம் :—

[இது திருநெல்வேலி ரெயில்வே ஸ்டெஷன் ஆர்யப் பிரகாசினி அச்சி யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை ரூபா இரண்டு. தபாற் கூலி வேறு. பிரதி நூலாசிரியரிடத்தில் அகப்படும்.]

இது திருநெல்வேலி ஜில்லாவைச்சார்ந்த அரிகேசவ நல்லூரிலிருக்கும் வித்துவான் புனல்வேலி வ. முத்து சுப்பையரவர்கள் இயற்றியது. "இந் நூல், சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடநூல் வல்ல வித்துவ சிரோ ரத்தின விப்பிரகுல சுப்பிரதீபரான், ப்ரம்மஸ்ரீ, இராமபத்திர தீக்ஷிதரவர்க ளால், வடமொழியிற் றமது பேரறிவா லாய்ந்து தெளிந்து, நவரஸமுறு நாடகமாக நவின்றருளப் பெற்றுலகிற் பரவியிருக்கின்றது. அதன் பொரு ளைத் தமிழ்நாட்டார் யாவரும் எளிதிலுணர்ந் தானந்தத்தை அநுபவிக்க இட மில்லாததுபற்றி, கசடறக் கல்லாச் சிறியேனெனினும், யான் கருதரிய சிற் சுகோதயக் கடலான இராம சரித மென்பதிலுண்டாம் பேரவாவி னேவுதலைக் கொண்டு, என் சிற்றறிவுக் கெட்டியபடி, செந்தமிழின் மொழிபெயர்த் தம் முறை வழாது, சந்தமுறு நாடகமாய்ப் பற்பல தினுசு தினுசான செய்யுட்க ளும், கீர்த்தனை, தரு, பத - ஜாவளிகளும், கண்ணிகளும், கேட்போர் படிப் போர் மனத்தைக் கவரும்படியான, நன்னயந்தருஞ் சொன்னயம்பெறும் உசிதா லங்கார வசனசிங்காரங்களுமாய் இயற்றியிருக்கின்றேன்" என்று நூலாசிரியர் தாமே முகவுரையிற் கூறியவண்ணம் நூலும் இனிது அமைந்திருக்கின்றது

என்பது நூலினைக் கண்ணுறுவார் யாவருக்கும் நன்கு விளங்கும். இந்நூல் சீர்காழி அருணாசலக் கவிராயர்செய்த இராம நாடகத்தையும் பெருங்கரைக் கவிக் குஞ்சரம் ஐயர்செய்த கந்தபுராணக் கீர்த்தனையையும் ஒத்து விளங்குகின்றது; பல வித்வான்களாலும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றது. வடமொழிப்போக்கை விடாமற்றழுவிச் செல்லுகின்றது. நாடக வியலுடையாருடைய கருத்தின்படி இது கூத்துநூலின் பாற்படும். கவித்தலம் மூப்பனார் வகுத்த ஜானகீ பரிணய வசனத்தைப் படித்தவர் யாவரும் அதனை நாடக ரூபமாகவே காண விரும்புவர் என்பது திண்ணம். நூலின் சொற்கோப்பும் அமைப்புமுறையும் பேரானந்தம் விளைக்கத்தக்கன. இது நல்லகடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இந்நூலினை யாவரும் வாங்கி வாசித்து நூலாசிரியனை ஊக்குவாரென்று நம்புகின்றோம்.

பொன் மரத்து நாடகம் :—

[இது சென்னைப் புரசைப்பாக்கம் ரூபி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது. இதன் விலை அணா எட்டு; தபாற்கூலி வேறு. சென்னை வேப்பேரி போஸ்டு, வெங்கடாசாலம் தெருவு, நெம்பர் 13. இந்து ஆயுள்வேத அவிழ்த சாலைத் தலைவர் ப. சுப்பிரமணிய முதலியாரிடத்திற் பிரதிகள் அகப்படும்.]

இது மதுரைத் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஆதினத்து வித்வான் திருவாலக் கோயில் திருச்சிற்றம்பலத்தம்பிரான் அவர்களுடைய மாணாக்கரும் செங்கற்பட்டு நத்தம் வாத்தியார் வேங்கடாசல முதலியார் அவர்களுடைய புத்திரருமான செங்கற்பட்டு டிஸ்டிரிக்கட் கோர்ட்டு பென்ஷன் அமீனா நத்தம் - பொன்னம்பல முதலியாரால் இயற்றப்பட்டது. இதில் முற்பாதிக்கு ஷெயார் சோதரர் நத்தம். முருகேச முதலியாரும், பிற்பாதிக்குச் சென்னைச் சூளை - சாமி பிள்ளை வீதி சங்கீத வித்வான் டி. புருஷோத்தம நாயகர் அவர்களும் இராக தாளம் அமைத்தனர். மரங்களெல்லாங் குழாங் கூடித்தமக்கு நாயகனாக வீற்றிருக்கும் அரசமரமானது ஒரு பயனுமின்றிவாளா எல்லாப் பூசனைகளையு மேற்றுக் கொண்டு இருக்கின்றது என்று கருதி அதனைத் தள்ளிவிட்டுப்பொன்மரத்தைத்தமக்கரசாகத்தெரிந்துகொண்டன என்னுங் கதையை வைத்துக்கொண்டு தொண்ணூற்ரூறு பக்கங்களில் ஒருநாடகம் புதுவதுபுனைந்தது மிக வற்புதமே. இது பல வித்வான்களாலும் சிறப்பித் துரைக்கப்பட்டுளது. அநேக கற்பனாலங்காரங்கள் அமைந்துளது. படிக்கப் படிக்கவினோதமாக விளங்குகின்றது. யாவரும் வாங்கி வாசிக்கத் தக்கது.

மான விஜயம் :—

[இது சென்னை டி, ஆர், சந்திர ஐயர் பதிப்பித்தது. இதன்விலை அணா எட்டு; தபாற்கூலி வேறு. பிரதி வேண்டுநர் டி - ஆர் - சந்திர ஐயர், 82, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை யென்றெழுதுக.]

இதனை இயற்றினார் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வி-கோ-சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள், பி.ஏ. இதற்குச் சுதேச மித்திரன் பத்திராதிபரான பிரம்மஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் ஆங்கிலத்தில் விரிந்த முகவுரை யொன்று வரைந்திருக்கின்றனர்; பிறக, நூலாசிரியர் தாமும் தமிழில் ஒன்று வரைந்திருக்கின்றனர். இப்புத்தகம் அங்கம் என்னும் ஒருவகைத் தமிழ் நாடகம். அதனிலக்கணம்

"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வெண்டும்"

என்னும் நாடகவியற் சூத்திரத்தான் நனிவிளங்கி நிற்கின்றது. இது முற்றுஞ் செய்யுளா முடிந்துள தேனும் பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வு கருதிச் சொல்விகற்பங்களும் நடைவேறுபாடுகளும் அமைத்துள பான்மைமிகவும் பாராட்டற்பாற்று. இதனுள் ஆன்ம லக்ஷணமும், போர் நீதியும், மெய்ம்மை, கலை நலம், மனநிறைவு இவற்றின் மாட்சியும், கனவினியல்பும், காரணகாரியப்பெற்றியும், கடவுளார் செயற்கருத்தும், குரவரிடத்தொழுகு மாறும், வாழ்க்கைப் பயனும், திரவியத்தி னின்றியமையாமையும், களியாட்டின் தீமையும், தற்கொலைப் பாவமும், மானத்தின் மாண்பும், ஆசிரியர்க்கு மாணாக்கர்பா லுள்ள அன்பும், உணர்வில் வழிப் பாவமின்மையும் அருமையாகத்தெரிக்கப்பட்டுள. இது 65 பக்கங்கொண்டு ஆறு களங்களாக முடிந்துளது. இது நாமகள் சிலம்பின் எட்டாவது பரல். ஈற்றிற் செய்யுண் முதற்குறிப்பகராதி ஒன்று கொண்டுள்ளது. இவ்வருமையான நூலைத் தமிழ்மொழியில் அவாக்கொண்டார் யாவரும் வாங்கி வாசித்து அகமகிழ்வரென்று நம்புகின்றோம்.

**உஷா பரிணயம்:**

[இது டி. ஆர். சந்திர ஐயரவர்கள் பதிப்பித்தது. இதன் விலை அணா ஆறு. தபாற்கூலி வேறு. பிரதிகள் வேண்டியவர்கள் மேற் கூறிய விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்க.]

இந்நூல் நாமகள் சிலம்பின் கண் ஏன்பதாம் பரலாம். இதனாசிரியர் சருக்கை-இராமசுவாமி ஐயங்காரவர்கள் பி.ஏ., இது நாட்டியராசகம் என்னும் ஒருவகை நாடகத்தின் பாற்படும்.

"இன்னிசைப் பாட்டு மன்னிய தாகி
யழகினு முடையினு மன்புறு தலைவியுந்
தீரோ தாத்தச் செவ்விய தலைவனும்
பீட மர்த்தநா யகனுப நாயக

னிவர்களு முடைத்தா யின்பமு நகையுங்
கொண்ட சுவைத்தாய்க் கோலமீ ரைந்துங்
காட்டி யியல்வது நாட்டிய ராசகம்."

இவ்விலக்கண மனைத்தும் இந்நூலின் கண் இனிது அமைந்து கிடக்கின்றன. இது நாலங்கமுள்ளது; கம்பீரநடை வாய்ந்துள்ளது. ஆங்காங்கு இனிய தமிழ்ச் செய்யுட்களும் காணப்படுகின்றன. இக்கதையைச் சைவ வைஷ்ணவச் சார்பின்றிப்பொது நோக்காய் எடுத்து முடித்திருப்பது மிகவும் பாராட்டற்பாலதே. ஆடவர் பெண்டிர் ஆகிய இரு திறத்தாரும் ஒருங்கே மன மகிழ்ச்சி குன்றாதவாறு படிக்கத்தக்கது. உஷையின் திருவுருவப்படமொன்று முன்னே அமைக்கப்பெற்றுளது. நல்ல கடிதத்தில் நன்கு பதிபிக்கப்பெற்றுளது. இத்தகைய நூல்களை நம் தமிழுலகம் இனிது போற்றுமென்பது திண்ணம்.

சாகுந்தள நாடகம் :

[சென்னைச் சுதேசமித்திரன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா எட்டு தபாற்கூலி வேறு.]

மகாகவி காளிதாஸரா லியற்றப்பட்டுப் பிரசித்திபெற்ற இந்த ஸம்ஸ்கிருத நாடகமானது, பூர்வம் கடலூர் காலேஜில் ஸம்ஸ்கிருத பண்டித ராயும், தற்காலத்தில் வெஸ்லியன்மிஷன் பாடசாலையில் உதவிப்போதகராயும், ஸேதுமாஹாத்மியம் என்னும் அருமையான நூலை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்தவராயு முள்ள என்-ஸ்வாமிநாத சாஸ்திரிகளால் யாவரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் ஸம்ஸ்கிருதத்திலுள்ளபடி மொழி பெயர்க்கப்பட்டது நாடக லக்ஷணச் சுருக்கமும் காளிதாசர் சரித்திரச் சுருக்கமும் மகா பாரதத்திலுள்ள சாகுந்தளோ பாக்கியானச் சுருக்கமும் முன்னுறுப்புக்களாக விளங்குகின்றன. இதனை மொழிபெயர்க்கு மிடத்துச் சம்ஸ்கிருத வ்யாக்கியானத்தையும் ஒட்டி வேண்டிய இடத்தில் விரித்தும், ஆங்காங்குக் குறிப்புரைகள் கொடுத்தும், செல்லுகின்றனர். யாவரும் இடர்ப்படாமல் வாசித்து அறிந்துகொள்ளத் தகுந்தபடி இந்நூல் அமைந்திருக்கின்றது. ஏறக்குறைய இருநூறு பக்கங்கொண்டதாயினும் இந்நூல் குறைந்த விலைக்கு விற்கப்படுவது மிகவும் வியக்கத் தக்கதே. இவ்விஷயம் ஒன்றே மற்றையவற்றினும் மிக விரைவாகத் தமிழ்மக்களை வாங்கி வாசிக்கும்படி தூண்டுமென்று எண்ணுகின்றோம்.

ஒதெல்லோ என்ற வெனிஸ் மோரியன் :—

[சென்னைத் திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாச வரதாசாரியர் கம்பெனியாராற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை ரூபா ஒன்று அணா நான்கு. கலிகோ கட்டடம் உளதாயின் ரூபா ஒன்று அணா பத்து. பிரதி வேண்டியவர்கள் பதிப்பித்தவரிடத்தும், எஸ்பிளனேடி லுள்ள ஜீ. ஏ. நடேசன் கம்பெனியாரிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.]

இந்நாடகம், நூலாசிரியர் சரித்திரமும் விருத்தி யுரை குறிப்புரைகளுமுடன் ஒட்டித் தமிழ் வசன நடையில் அ. மாதவையரவர்கள் பி.ஏ., மொழி பெயர்த்துக் கனம்பொருந்திய மில்லர் துரையவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுளது. முகவுரை, வில்லியம் ஷேக்ஸ்பியர் சரித்திரம், ஷெயார் பிரபந்தங்களின் அட்டவணை, பொதுப்பாயிரம், ஒதெல்லோ நாடக வரலாறு முதலிய முன்னுறுப்புக்கள் அமைந்துளவிந்நாடகம் ஆங்கிலத்தில்மகாகவியாகியஷேக்ஸ்பியரின் கருத்துக்களை உள்ளவாறே தமிழ் மக்களும் அறிந்து பயன்படவேண்டுமென்ற கருத்துப் பற்றியே இயன்றுளது. "இருவரேனும் முற்றும் ஒவ்வாராய் இவ்வண்ணம் வேறுபட்ட மனிதரிற் பலரையே பாத்திரங்களாக்கொண்டு அவரவர் நடை உடை பாவனைகளையும் உள்ளக் கருத்துக்களையும் சிறிதும் பிறழாது, அணுவும் முரணாது, அவரவர் வாயிலாகவே தெரிவித்து ; ஓர் கணத்தைப் பல்லாண்டு போலவும், பல்லாண்டுகளை ஓர் கணம் போலவும், தம்மாய வித்தையாற் காட்டிக், கதை நிகழ்ச்சியைக் கரதலாமலகம்போல விளங்கத் தீட்டும் நாடகப் புலவர் திறமைக்கு, ஏனைய கவிஞரின் தன்மை இணைசொல அணுகவும் தரமன்று. விரியுஞ் சிந்தனையில் வினைசூழ்ந்து புயம் வீங்கி இறுமாந்திருக்கும் மேதினி யாளனையும், எரியும் கும்பியில் இரையின்றி மனமேங்கி ஏமாந்திருக்கும் ஏதுமில் ஏழையும் ; தன் கணவனை யன்றி வளையாமுடி மன்னரையும் துரும்பென இகழ்ந்தொழுகும் கற்பரசியையும், விலங்குகள் போன்ற வீணரைக் கரும்பெனப் புகழ்ந்து அவர்வேண்டிய போது இன்பம் விரும்பித் தன்மானத்தை விற்று வயிறு வளர்க்கும் வேசியையும் ; முதனூற் றூண்டானையும், கடைநூற்றூண்டானையும் ; யூதனையும், கிறிஸ்தவனையும் ; கிழவனையும், சிறுவனையும் ; மதிமந்தனையும் அதி ஞானியையும் ; அங்க ரூபனையும், அங்கஹீனனையும் ; ஆஸ்திகனையும், நாஸ்திகனையும் ; பித்தனையும், சித்தனையும், அனைவரையும் ஒருங்குதானே ஆக்கி, ஒரே கணத்தில் நாற்புறமும் நவரசங் கொழிப்ப நடித்துக் காட்டும் சூத்ரமாகிய மனோ சக்தியால் அமையும் நாடக இலக்கியத்தின் பெருமை, நம்மால் நவிலற்பாற்றோ ! இது நிற்க, ஐவகை இலக்கணங்களையும் ஆராய்ந்தறிந்த ஆன்றோரால்அமைவுற்றதமிழாலயம், மனோரம்மியமான கோவை, இலம்பகம், மாலை, மஞ்சரி வஞ்சி, காஞ்சியாதிய அணிகள் பலவால் அழகு பெற சிறப்பத் தன்னைச் சார்ந்து கண்டு களிக்குமாறு, பாமரர் பண்டிதர் பாவலர் நாவலர் யாவரும் ஈண்டச் செய்வதோர் நாதமிட்டொலிக்கும் அந்நாடக மணிகள் இக்காலத்திலே இசை செயப் பெறாமை, தமிழ்த் தளிக்கோர் பெருங்குறையே யாம்." இவ்வாறு மாதவையரவர்கள் தமது முகவுரையிற் கூறிய யாவும் அறிவுடையோர் யாவர்க்கும் உடன்பாடாமென்பது திண்ணம். மேற்கூறிய குறையை நீக்க முயன்று வருங் கனவான்களுள் நமது மாதவைய ரவர்களும் ஒருவர் என்பது யாவருமுணர்வர். இனிய தெளிவான உயர் நடையில் எழுதப்பட்ட இந்நாடகத்தின் மீது ஒரு குறையுமேற்றுதலடாது. நூலின் சிறப்பனைத்தும் ஆதிமுதலந்தம் வரைக்கும் படித்

தார்க்கே இனிதுவிளங்கும். மொழிபெயர்ப்பு வகையில் ஒருவித இடர்ப்பாடு
மின்றி ஆங்கில மகாகவியின் உள்ளக் கிடக்கைகள் அனைத்தையும் ஒழுங்கு
பெற இனிமையான தமிழ்ச் சொற்களில் அமைத்துள பான்மை யாவரும்
பாராட்டற்பாலதே. நூலின் இடையிடையே சிற்சில பகுதிகள் தமிழ்ச்செய்
யுள் உருவத்திலும் அமைக்கப்பட்டுள. தமிழ் மக்களுள் ஆண்பெண் என்ற
வேறுபாடின்றி யாவரும் ஒத்த மகிழ்ச்சியுடன் படிக்கத் தக்கது. ஆங்காங்குக்
காட்டியிருக்கும் அடிக்குறிப்புக்களின் சிறப்பு நூலினைப்படித்தார்க்கே நன்கு
புலனாம். அவையனைத்தும் மிகவும் உசிதமான இடங்களில் நயம்பட எழுதப்
பட்டுள. முதனூலாசிரியராகிய வில்லியம் ஷேக்ஸ்பியரின் திருவுருவப்பட
மொன்று நூன்முகத்து அமைக்கப்பட்டுளது. ஐந்து அங்கம் உள்ளது. ஏறக்
குறைய இருநூற்று நாற்பது பக்கங் கொண்டது. இந்நாடகத்தால் மக்கள்
அறிந்து கொள்ளக்கூடிய நீதியாவது உலகவாழ்க்கைப் பயனை அடைதற்குக்
கடமையின்கட் சற்றும் இடையறாத நல்லொழுக்கமும் ஆழ்ந்த ஆலோசனை
யின் விளைவெனப்படும் விதான புத்தியும் மனவுறுதியும் அடக்கமுமே இன்றி
யமையாத கருவிகளாம் என்பதாம். வேண்டுமென்றின்றி அகஸ்மாத்தாய்
ஓரணுவளவே நெறிதவறிய ஒழுக்கமும் முழுநாசத்தை விளைக்கக்கூடும் என்ற
உண்மையும் இந்நாடகத்தாற் புலனாகின்றது. தமிழுலகுக்கு ஒதெல்லோ நாட
கத்தை மொழி பெயர்த்துத் தந்தும் இன்னும் பல நாடகங்களை மொழி
பெயர்த்துத் தருவதாக வாக்களித்தும் இருக்கின்ற நம் நண்பர் மாதவையரவர்
கள் மாட்டு அத்தமிழுலகம்மிக்க நன்றிபாராட்டவேண்டு மென்று எதிர்பார்க்
கின்றோம்.

**இரண்டு திக்கற்ற குழந்தைகள் :—**

[இது சென்னை லாரன்ஸ் அசைலம் அச்சியந்திர சாலையில் எடியுகேஷ
னல் டிரேடிங் கம்பெனியாராற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை ரூ. ஒன்று
அணா நான்கு. தபாற்கூலி வேறு. பிரதிவேண்டியவர்கள் பதிப்பித்தோரிடம்
பெற்றுகொள்ளலாம்.]

இந்த விநோதமான கதையை இயற்றினவர் கதை சொல்வதிற் பெயர்
போன பண்டிதர் **ச-ம-நடேச சாஸ்திரியாரவர்கள் பி. ஏ.,** இவருடைய சாமர்
த்தியத்தைப் பற்றிச் சாமானிய ஜனங்கள் யாவரும் அறிந்திருத்தலின் யாமத
னைக் குறித்துப் புகழ்ந்து பேசவேண்டிய தில்லை. நூலின் பெயருக் கேற்ற
படியே திக்கற்றவருக்குத் தெய்வமே துணையென்ற பழமொழியின் உண்மைப்
பொருளை வலியுறுத்திக்காட்டி இராதை, அலமு என்ற இரண்டு தாயற்ற பெண்
குழந்தைகளின் வாழ்க்கைச் சரிதத்தைக் கூறுமுகத்தால் அநேக ஒழுக்கமுறை
களையும், நீதியியல்புகளையும், பெண்கல்விச் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதா
கின்றது. இது படிக்கச் சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிக்குநர் யாவர்க்
கும் அநுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படிச் செய்கின்றது. இஃது
ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே அகமகிழ்ந்து படிக்கத்தகுந்த தெளிவும் விளக்

கமும் வாய்ந்த தமிழ்நடையில் எழுதப்பட்டுளது. இத்தகைய அருமை வாய்ந்த நூல்கள் பல நம் நூலாசிரியர் எழுதி வெளிவிடுவாரென்று நம்புகின்றோம். இது நல்ல கடிதத்தில் நன்கு அச்சிடப்பட்டுளது. யாம் சொல்லாமலே இந்நூலினை யாவரும் வாங்கிப் படிப்பார்களென்பது நிச்சயம்.

வியாபார நீதி :—

[இது சென்னைச் சடகோபாசாரியர் கம்பெனியாரால் வெ-நா-ஜூபிலி அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை அணா எட்டு; தபாற் கூலி வேறு. பிரதி வேண்டியவர்கள் பதிப்பித்தவரிடத்திற் பெற்றுக் கொள்க.]

இவ்வரிய நூலை யியற்றினார் சித்தூர் - சுப்பிரமணியாசாரியார் பி. ஏ., எல். டி., இதன் கண்ணே வியாபாரிகளுக்கு மிகவும் இன்றியமையாதனவாகிய நீதிகளனைத்தும் ஒருங்கே தொகுத்து ஏறக்குறைய நாற்பத்தொரு கட்டுரைகளாகக்கூறப்பட்டுள. இக்கட்டுரைகளனைத்தும் படிப்போர்க்கு ஞாபகத்திலிருக்கும் வண்ணம் ஓராற்ருற்சூத்திர ரூபமாக அமைக்கப்பட்டுள. இவற்றிற்கு வியாக்கியானம்போலத் தெளிவும் இனிமையும் விளக்கமும் அழகும் வாய்ந்த சுலபமான தமிழ் நடையில் விசேட உரைகள் ஒவ்வொரு கட்டுரையின் கீழும் வியாங்களோடும் மேற்கோள்களோடும் எழுதப்பட்டுள. இது வியாபாரிகளேயன்றி மற்றைய சாமானிய ஜனங்களும் படித்துப் பயன் பெறத்தக்கதோர் நூல் நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. ஏறக்குறைய நூறு பக்கங்கள் கொண்டுளது. தமிழ்நாட்டின் அபிவிருத்தியைக்கருதியோர் யாவரும் இந்நூலினை நன்கு மதிப்பர் என்பது திண்ணம். புதுமையும் பெருமையும் வாய்ந்த இந்நூலை ஆங்கில பாஷையினின்றும் படித்துத் தொகுத்துத் தந்த நமது நூலாசிரியர்க்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுளது.

---

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**சென்னப்பட்டணத்தில் ஹிந்து பாலிகர் ஹை ஸ்கூல்** :—சென்னப் பட்டணத்தில் கல்விபயிலும் ஹிந்து சிறுமிகளுக்கு ஒரு ஹைஸ்கூல் இருக்க வேண்டியது அத்தியாவசிமானது, இதைப்பற்றி எஸ். பி. ஜி. மிஷனார் தீர்க்கமாய் ஆலோசித்து 35,000 ரூபாய் செலவுசெய்து தேக ஆரோக்கியமான ஸ்தலமாகிய ஸலிவன்தோட்டத்தில் மேற்படி பாலிகா பாடசாலை ஒன்று ஸ்தாபிக்க வேண்டியதென்று தீர்மானம் செய்தார்கள். மேற்படி மிஷனைச் சார்ந்த (Women's Branch) வேலைகளை நடத்தும் சீமாட்டிகள் அதை உடனே நடத்த ஆரம்பித்திருக்கின்றனர்.

**மஹாமஹோபாத்தியாயர் இராஜு சாஸ்திரியாரின்மரணம்.**—நாளது மார்ச்சுமீ 4உ தென்னிந்தியாவில் மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த இராஜு சாஸ்திரியாரவர்கள் எண்பத்தெட்டாம் வயதிற்காலஞ்சென்றார். அவர் தென்னிந்தியாவில் இருந்த சமஸ்கிருத பண்டிதர்களி லெல்லாருள்ளும் பெரியவர்; அவர் சென்ற ஐம்பது வருஷகாலமாய்த் தென்னிந்தியாவிலுள்ள பிராமண கூட்டத்திற்கு சாஸ்திரசந்தேகங்களையெல்லாம் தீர்த்துக்கொண்டு வந்தார், அதற்காக இந்திய கவர்ன்மெட்டார் அவருக்கு மஹா மஹோபாத்தியாயர் என்னும் பட்டம் அளித்திருந்தனர்.

**ஹிந்து அநாதைப்பிள்ளை ஆதரணை சாலைகள்.**—ஹிந்துக்கள் தங்கள் ஜாதி அநாதைப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டி ஏதாவது சரியான ஏற்பாடுகள் செய்யவேண்டிய தவசிய மென்று சீக்கிரமாகவே யவர்கட்குப் புலப்பட்டு வருகின்றது. பஞ்சமும், பிளேக்நோயும் பலரைத் திக்கற்ற அநாதைகளாக்கி விட்டு வருகையில், முன்போல் சரியான ஏற்பாடுகள் செய்யாமல் அவர்களை வருந்தி யலையவும், ஒருவேளை இறக்கவும், விட்டு விடுதல் பெருத்த அநியாயம். முன்காலங்களில் யாரேனுமொரு பிள்ளை திடீரென்று தன் பெற்றோரையிழந்து அநாதை யாகுமானல், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அதையெடுத்து வளர்ப்பதும், கொஞ்சம் பெரியபிள்ளையாயிருந்தால் தங்கள் வீட்டில்வைத்துக்கொள்வதும், அப்படி பார்க்க யாருமில்லாவிட்டால் அது அடிமையாப்போவதும், கஞ்சித்தண்ணீர் இல்லாமல் இறப்பதும் வழக்கமாயிருந்தது. குடும்பசம்பந்தமும் சிநேகமுறையும் தற்காலம் முன்னளவு பலம்பொருந்தி யிருக்கவில்லை யென்ன வேண்டும். அடிமைத்தனமோ நாட்டினின்றும் விலக்கப்பட்டது. பூததயை இரக்கம் இவை மேற்கொள்ளும் அறிவுள்ள எவரும், அப்பிள்ளைகளைப் பட்டினியாகக்கிடந்து, ஆகாரமின்றி யிறக்கவிடுவது பெரும்பாதகம் என்று எண்ணுவார். இத்தேசத்தில் வந்து கிறிஸ்தவ குருத்தொழில் செய்யும் மிஷனெரிமார் பலர், அவ்வநாதைப்பிள்ளைகளின் உதவிக்காக விரைந்து, ஆதரணச் சாலைகளும் அன்ன சாலைகளும் ஏற்படுத்தி, இந்நற்காரியத்தில் தலையிட்டுக்கொண்டனர். சர்க்காரும் அவ்வித அநாதைப் பிள்ளைகளைப் பஞ்சகாலத்தில் காப்பாற்றிவரலானார்கள்.

தற்காலம் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷன்களைப் பாதிபோன் றிருப்பனவும் பாதி அவற்றிக்குப் போட்டியாயிருப்பனவுமாகிய பிரமசமாஜம் ஆரிய சமாஜம் முதலியபோன்ற இரண்டொரு மதப்பிரிவுகள் இக்காரியத்திற் பிரவேசிக்கலாயின. சுவாமி விவேகாநந்தரும் ஒரு அநாதை ஆதாரணை சாலை ஏற்படுத்தினர். பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஆரியசமாஜத்தினரும் அவ்விதசாலைகள் பல ஏற்படுத்தியிருக்கின்றனர். சென்றமாதம் சென்னைக்கிறிஸ்தவ கலாசாலைச் சஞ்சிகைப்பத்திரிகையில் ஒரு இந்துகனவான், இவ்வித ராஜாதானியிலுள்ள ஹிந்து பாடசாலைகளில் சிலவற்றை மூடிவிட்டு அவற்

றை நடத்திவரும் பணத்தைக்கொண்டு அநாதைப் பிள்ளைகளின் ஆதரணை சாலைகள் ஏற்படுத்தினல் நலமாயிருக்கும் என்று எழுதியிருக்கின்றார், இந்த விஷயத்தில் என்னசெய்யப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். இந்தியர்களிடமிருந்து தாம் ஸ்தாபித்த "ஆதரணைச் சாலைக்கு திரவிய சகாயம் மிகவும் கொஞ்சந்தான் கிடைத்து வந்தது என்று சுவாமி விவேகாநந்தர் பலமுறை அதிக வருத்தத்துடன் முறையிட்டிருக்கிறார். தென் இந்தியாவில், அநுபவத்தில் இவ்விஷயத்தில் அதிக பயனும், உதவியும் கிட்டுமோ என்பதைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகத்துடன்தா னிருக்கிறோம். என்றாலும், அவ்வித உதவிகிட்டுவது எமக்கு அத்தியந்த சந்தோஷம் விளைக்கும் என்பது நிச்சயம்.

**சென்னைச் சித்திரத்தொழிற்காட்சி.**—தற்காலம் தென்னிந்தியாவிலே சிற்பவேலைக்காரரும் சித்திர வேலைக்காரரும் செய்யும் வேலைப்பாடு எம்மட்டு என்று கண்டறிய ஒருவன் கோரினல் வருஷாவருஷம் சென்னைச் செனட் சங்கசாலையில் பிரத்யக்ஷமாய்க் காட்டப்பட்டு வருகிற சென்னைச் சித்திரவேலைக் காட்சியைப்போய் பார்க்கவேண்டியதேயாம். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெரிய நகரங்களில் வருஷப் பிரதி வருஷம் காட்டப்படுகிற சித்திரவேலைக் காட்சிகளோடு இத்தேசத்துக் காட்சிகளை ஒப்பிட்டுப்பார்த்தால் இவ்விரண்டிற்கும் எவ்வளவோ வித்தியாசம் உள்ளது என்று கண்டறியலாம். அப்படியாயினும் சுதேச அபிமானிகள் தங்கள் தேசச் சித்திரத்தொழில் அபிவிர்த்தி எவ்வளவில் இருக்கின்றதென்று கண்டறியக்கூடியதனல் இக்காட்சிகளை வெகு சிரத்தையோடு போய்ப்பார்த்தறியக்கூடும், சிற்பவேலைகாரர்களும், சித்திரப் படமெழுதுகிறவர்களும் கௌரவப்படுத்தத் தக்கவர்கள். அல்லர், சாதாரண வேலைக்காரர்கள் தான் என்று நாம் நினைக்கும் அளவும் விந்தையான வித்தையாகிய இச்சித்திரத் தொழிலுக்கு சரியான அபிவிர்த்தி கிடைப்பது மிக அருமையாகும். இம்மாதிரி வேலை செய்வோரைப் பற்றி ஜனங்கள் எந்தத் தேசத்தில் தாழ்வான அபிப்பிராயம் கொள்ளுகிறார்களோ அத்தேசத்தில் அவ்வேலைக்காரர்கள்சாமானியவேலைமாத்திரம் செய்வாரேயன்றி மிகநேர்த்தியான யாதொன்றையும் செய்ய சாத்திய மில்லாமற்போகும். ஆகையால், தென்னிந்தியாவிலுள்ள அவ்வித வேலைக்காரர்கள் தேசத்துப் புகழைக் கொண்டு வரவேண்டுமானல் நாமே அவர்களைக் கனப்படுத்தி அவர்கள் தொழில் மேலானதென்று எண்ணி அவர்களை உற்சாகப்படுத்தி வரவேண்டியது. ஐரோப்பாவிலே நன்றாய்ப் படித்தவர்களும் இத்தொழிலை ஆவலோடும் மிகச்சாமர்த்தியத்தோடும் செய்து வருவதனல் தங்களுக்கு லாபத்தை வருவித்துக் கொள்வதுடன் தேசத்துக்கும் கீர்த்தியை வருவிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

மேலும் சித்திரவேலையிற் பிரியமுள்ளவர்கள் அதனல் ஜீவிக்கவேண்டுமென்றிராமல் அதனை இன்பத்தொழிலாகக் கைப்பற்றுவார்கள். இந்தச் சென்னைக்காட்சியிலும் காட்டப்பட்ட பல சித்திரவேலைப் படங்களும், நேர்த்தி

யான தையல் வேலைகளும் பல துரைமார்களாலும் துரைசானிகளாலும் ஜீவனார்த்தமாகவல்லாமல் இன்பத்தொழில்களாகச் செய்யப்பட்டு, காட்டப்பட்டன.

இக்காட்சியிற் காட்டப்பட்டவைகள் என்னென்னவெனில், எண்ணெய் ஏற்றிய படங்களும், நீரேற்றப்படங்களும், மைவிறப் படங்களும், புகைப் படங்களும் மரச்சிற்ப வேலைகளும், பித்தளையில் சித்ர வேலைகளும், சந்தனமரச் சிற்பவேலைகளும், பூத்தையல் வேலைகளும், சமக்காளம் போன்றவைகளுமாம். சலவைக்கல் சிற்ப வேலைகள் ஒன்றும் அங்குகாட்டப்படவில்லை என்று கண்டறிந்தோம். சுதேசசித்திர வேலையில் பிரியங்கொண்ட அநேகர் வருஷம் வருஷம் இது விர்த்தியாகும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். எப்படியாயினும் சித்திரப்படவேலையில் விர்த்திக்கு இடம் இன்னும் அதிகமாயிருக்கிறது. அது படிப்படியாய் உண்டாகுமென்று எண்ணுவதற்கும் இடமுண்டு. ஏனெனில் தற்கால சித்திரப்படவேலைக்காரர்கள் முந்திய சித்திரப்படங்களைப்பார்த்து, ஆடுகள் ஒன்றின்பின் ஒன்று வழிந்து ஓடுவதுபோல் விவேகமின்றி அதன் போலிகளை எழுதிவிடாமல் சுபாவப் பொருள் கண்ணாரக்கண்டு படம் பிடித்து உண்மையாயும், புத்தி கூர்மையோடும் எழுதக் கற்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் இருவர் சகோதரர்கள் மிகவும் கீர்த்தியடைந்து மேல்நோக்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் யாரெனில்: ரவி வர்மா என்பவரும் அவர்தம்பியாகிய ராஜராஜவர்மா என்பவருமே. இவ்விருவரில் மிகவும் பிரபலமானவராகிய ரவி வர்மா தாம் எழுதிய Sir George Moore, The Honorable Sir V. Bashyam Iyengar, The Honorable Sir S Subramania Iyer) ஆகிய இவர்களுடைய படங்களையும் காட்டுகிறார். இவைகளில் (Sir V Bashyam Iyengar) அவர்களுடைய உருவப்படம் மிகவும் ஜீவகளையுள்ளது. சித்திரவேலைசெய்யும் ஒருவர் எழுதிய இவ்வித ரூபபடங்களையே பார்ப்பதனால்தான் அவருக்கு அவர்வேலைசெய்வதில் உண்மையுள்ள சாமர்த்யம் உண்டோ என்று கண்டறியக்கூடும். யாவரும் பார்க்காத தேவிகளுடைய உருவத்தைப் பாவனை காட்டுவது சாமர்த்தியமில்லாத சித்திர வேலைக்காரருக்கு கூட சுலபமாம்; ஆனால் நாம் பார்த்திருந்த ஒருவனுடைய முக ரூபத்தை நமக்குப்பேசத்தக்கதாக எழுதிக்காட்டுதற்கு மிகுந்த தேர்ச்சியும் விவேகமும் வேண்டியது அவசியம். ரவிவர்மா அவர்களுக்கு வெகு அருமையான இந்த சாமர்த்தியம் உண்டென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. அவர் திருவநந்தபுரத்துக்கு 24-மைல் தூரம் வடதிசையிலுள்ள கிலிமனூரிலே திருவாங்கூர் மகாராஜா வம்சத்துக்கு விவாகசம்பந்தமான ஓர் குடும்பத்தில் பிறந்தார். தமது ஜீவகாலம் எல்லாம் ரவி வர்மா திருவாங்கூர் மகாராஜாவுக்குமாத்திரமல்ல, இன்னும் பல ராஜாக்களுக்கும் கவர்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் மிகவும் பிரியமுள்ளவர். இந்த சிநேகம் அவருக்கும் அவர்களுக்கும் கனமுள்ளது. அக்காலத்தில் வேல்ஸ் பிரபுவாயிருந்த நமது சக்கிரவர்த்திக்கு1875 ஷ் ரவிவர்மா எழுதின இரண்டு படங்களை திருவான்கோடு மகாராஜா கொடுத்தார். இன்னும் அநேகவிதமாய் ரவிவர்மா யோக்கியமாய் நியாயமான கனத்தையும் கீர்த்தியையும் பெற்றிருக்கிறார் படிப்புள்ள நமது வாலிபர்களிற் சிலர் சித்திரத்தொழில் கனமுள்ளதென்று எண்ணி அதில் தேர்ந்து நல்ல ஜீவனம் பண்ணியும் கீர்த்தியடைந்து வருவார்களாக.